திருப்பாவை

(சங்கத் தமிழ் மாலை முப்பது)

ஸ்ரீ எஸ். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்

ஆசிரியர், ஸ்ரீ வைஷ்ணவ ஸுதர்சனம்

19, கண்ணதாசன் சாலை,

தியாகராய நகர்,

சென்னை - 600017.

http://acharya.org

திருப்பாவை

(சங்கத் தமிழ் மாலை முப்பது)

1. மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர் போதுமினோ, நேரிழையீர்!
சீர்மல்கு மாய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்!
கூர்வேற் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்
ஏரார்ந்த கண்ணி யசோதை யிளஞ்சிங்கம்
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம்போல் முகத்தான்
நாராயணனே நமக்கே பறை தருவான்
பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய்.

கண்ணனைப் பெற விரும்பிய ஆண்டாள் அப்பேறு கிடைக்காமையாலே ஸ்ரீவில்லிபுத்தூரைத் திருவாய்ப்பாடியாகவும், அங்குள்ள பெண்களை இடைப் பெண்களாகவும், தன்னை அவர்களிலே ஒருத்தியாகவும், வடபத்ரசாயியைக் கண்ணனாகவும் பாவித்து, இடைப் பெண்கள் ஊருக்குச் செழிப்பு ஏற்படவும் தாங்கள் கண்ணனைப் பெறவும் நோற்ற நோன்பைத் தான் நோற்கிறாள் இத்திருப்பாவையில். ''மார்கழித் திங்கள்'' எனும் முதற்பாட்டில் நோன்பு நோற்கும் காலத்தைக்கொண்டாடி தங்களால் அடையத்தக்கவனாகிய ப்ராப்யமும் அடைவிப்பவனாகிய ப்ராபகமும் கண்ணனாகிற நாராயணனே என்று அறுதியிடுகிறாள்.

'மாதங்களில் நான் மார்கழியாகிறேன்' என்று கண்ணனே கீதையில் கொண்டாடிய மாதம் இது. வருஷத்திற்கு விடியற்காலை நேரமாகையாலே ஸத்வகுணம் மிகுந்திருக்கும்

http://acharya.org

காலம். பயிர்கள் முளை கிளம்பும் காலத்தில் உயிர்களாகிய நாம் உய்வுபெற வேண்டும். மாதம்போலே சுக்லபக்ஷமாகிற பக்ஷமும் மிகச் சிறந்தது. மதிநிறைந்த இப்பக்ஷத்தில் நமது மதி நிறைவுபெற வேண்டாமோ? இந்த நாளும் எத்தகைய நாள்! கண்ணனுடன் கூட்டிவைக்கும் இதுவன்றோ நன்னாள்.

கண்ணனைப் பிரிந்த நமது விரக வெப்பம் தீரும்படி கண்ணனாகிற தடாகத்தில் குளிப்போம் வாருங்கள். நம்மிடம் இதற்குப் பெரிய முயற்சிகள் தேவையில்லை. வர விருப்பம் உடையவர்கள் வரலாம். பலர்கூடி அவனை அனுபவிப்பதே சுவையுடையதாகையாலே அனைவரும் வாருங்கள். ஆபரணங்களை அணிந்த அழகிகளாகிற உங்களைக் காண்பதே பெரும்பயனாயிற்றே. காலம் மிகச் சிறந்ததாய் அமைந்தது போலே ஊரும் மிகச் சிறந்ததாயன்றோ அமைந்திருக்கிறது. பாலும் வெண்ணெயும் கண்ணன் குணங்களோடு வெள்ளமிடும் சீர்மல்கு மாய்ப்பாடியன்றோ இது. நீங்களோ ஜீவாத்மாவுக்கு நிலைநின்ற செல்வமாகிற கண்ணனது கைங்கர்யச் செல்வத்தை நிரம்பப் பெற்றவர்கள். கண்ணனையல்லது அறியாத சிறுமிகள்.

கண்ணனோ அவனை ஓர் எறும்பு கடிக்கவந்தாலும கூர்வேலை எடுத்துவரும் பரிவுடைய நந்தகோபருடைய குமரன். கண்ணனைக் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருக் கையாலே அழகு நிரம்பிய கண்ணையுடைய யசோதைக்கு இளஞ்சிங்கம் போலே இருப்பவன். கண்டவர் களைப்பை ஆற்றும் கார்முகில் போன்ற மேனியையும் செந்தாமரை போன்ற கண்களையும் எதிரிகளுக்குச் சூரியன் போலவும் அன்புடையார்க்குச் சந்திரன் போலவும் உள்ள

http://acharya.org

திருமுகத்தையுமுடையவன். நாராயணனாகிற அவனே அவனையல்லது வேறு கதியற்ற நமக்குக் கைங்கர்யமாகிற பெரும்பேற்றைத் தருவான். நம்மையும் அவனையும் பிரித்துவைத்த ஆயர்களே நம்மைக் கொண்டாடும்படி இந்த நோன்பிலே ஈடுபட்டு நமக்கும் ஊருக்கும் நன்மைகள் விளையும்படி செய்வோம் வாருங்கள் என்கிறாள் ஆண்டாள் இப்பாட்டில்.

சங்கத் தமிழர்கள் ''புல்வத்தாமரை புரையும் கண்ணன் வெளவல் காரிருள் வயங்கு மணிமேனியன்'' முதலான இடங்களில் திருமாலின் திருமேனியையும் திருக்கண் களையும் பேசியதுபோலவே சங்கத் தமிழ்மாலையில் ஆண்டாளும் ''கார்மேனிச் செங்கண்'' என்று அருளிச் செய்தது சுவைக்கத்தக்கது.

2. வையத்து வாழ்வீர்காள்! நாமும் நம் பாவைக்குச்
செய்யும் கிரிசைகள் கேளீரோ, பாற்கடலுள்
பையத் துயின்ற பரமனடி பாடி
நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி
மையிட்டெழுதோம் மலரிட்டு நாம் முடியோம்
செய்யாதன செய்யோம் தீக்குறளை சென்றோதோம்
ஐயமும் பிச்சையு மாந்தனையும் கைகாட்டி
உய்யுமா றெண்ணி யுகந்தேலோ ரெம்பாவாய்.

''வையத்து வாழ்வீர்காள்'' எனும் இரண்டாம் பாட்டில் பரம்பொருளான கண்ணனைப் பெற விரும்பும் ஜீவர்களுக்கு இயற்கையாகவே அமைந்திருக்கும் தன்மைகளைச் சொல்லுகிறாள் ஆண்டாள்.

வையத்தில் வாழ்வு பெற்றவர்களே! தாழ்வைக் கொடுக்கும் இவ்வுலகத்திலிருந்தும் வாழ்வு பெற்றிருப்

http://acharya.org

பவர்களே! குணங்கள் பகல் விளக்குப்போலே இருக்கும் வைகுண்டத்தில் இராமல், குணங்கள் இருட்டில் விளக்குப் போலே ஒளிவிடும் இவ்வுலகத்தில் இருக்கிறீர்கள். அதிலும் கண்ணன் பிறந்து வளரும் திருவாய்ப் பாடியில் பிறந்திருக்கிறீர்கள் - அதிலும் ஆண்களாயிராமல் பெண்களாயிருக்கிறீர்கள். பெண்களாயிருந்தும் பருவத்தில் மூத்தவர்களாயிராமல் அவனோடு ஒத்த பருவத்தை யுடையவர்களாயிருக்கிறீர்கள். இதுவன்றோ தலைசிறந்த வாழ்ச்சி. அவனாலே அவனைப் பெறவேணும் என்றிருக்கும் நாமும், அவனைப் பெற வேண்டும் என்னும் துடிப்பாலே நோற்கும் நம்முடைய நோன்புக்கு இயல்வாகச் செய்ய வேண்டும் காரியங்களைக் கேட்பீர்களாக.

நாராயணனான அந்தப் பரவாஸுதேவன் உயிர்களை உய்விப்பதற்காகத் திருப்பாற்கடலில் ஆதிசேஷ சயனத்தில் அறிதுயிலில் அமர்ந்திருக்கிறான். அவன் ஒப்புயர்வற்றவன். பரமபதத்தில் வீற்றிருக்கும் இருப்பைக் காட்டிலும் திருப்பாற்கடலில் அவன் கிடக்கும் திருக்கோலம் அழகு மிகுந்திருக்கிறது. அவனுடைய மேன்மைக்குத் தோற்று அவன் திருவடி களைப் பாடி அப்படிப் பாடுவதே நெய், பால் முதலான இனிய பொருள்கள் அனைத்துமாயிருக்கை யாலே நாம் நெய்யுண்ணமாட்டோம். பாலுண்ண மாட்டோம்.

கண்ணனைப் பிரிந்ததால் ஏற்பட்ட விரகதாபம் தீர விடியற்காலையில் நீராடுவோம். அவன் வந்து நம் கண்ணுக்கு மையிடாமையாலே நாமே கண்ணுக்கு மையிடமாட்டோம். அவன் சூடிக்களைந்த மாலையை நமக்குச் சூட்டாமையாலே நாம் மலர்சூடமாட்டோம். முன்னோர்கள் செய்யாதவற்றைச் செய்ய மாட்டோம்.

http://acharya.org

ஆய்ப்பாடிப் பெண்களில் ஒருத்தி வராவிட்டாலும் கண்ணனிடம் போகமாட்டோம். பிறருக்குத் தீங்கு விளைக்கும் பொய் சொல்லுதல், கோட் சொல்லுதல் முதலானவற்றைப் பேசமாட்டோம். எம்பெருமானை அனுபவிக்கவேண்டும் என்றிருக்கிறவர்களுக்கு அதை அளிக்கையாகிற ஐயமும், அவன் அடியார்களை அனுபவிக்கவேண்டும் என்றிருக்கிறவர்களுக்கு அதைக் கொடுக்கையாகிற பிச்சையும் அவர்கள் வேண்டும்வரை அளித்து 'நாம் கொடுத்தோம்' என்று நினையாமல் இவ்வண்ணமாக உய்யும் வகைகளை எண்ணி இவ் விஷயத்தில் பாரிப்பைப் பெருக்கிக் கொண்டிருப்போம் என்கிறாள் ஆண்டாள்.

சங்கத்தமிழர் ''தன் உரு உறழும் பாற்கடல் நாப்பண், மின்னவிர் சுடர்மணி ஆயிரம் விரித்த, கவைநா அருந்தலைக் காண்பின் சேக்கைத் துளபம் சூடிய அறிதுயிலோனும்'' என்று பரிபாடலில் பாடியது போலே சங்கத்தமிழ் மாலையிலும் ''பாற்கடலுள் பையத்துயின்ற பரமன்'' என்று ஆண்டாள் அருளியது அனுபவிக்கத் தக்கது.

3. ஓங்கி யுலகளந்த வுத்தமன் பேர்பாடி
நாங்கள் நம்பாவைக்குச் சாற்றி நீராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரிபெய்து
ஓங்கு பெருஞ்செந்நெலூடு கயலுகளப்
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்பத்
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடம்நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய்.

முதற்பாட்டில் 'நாராயணன்' என்று பரமபதத்திலிருப்பையும், இரண்டாம் பாட்டில் 'பாற்கடலுள் பையத்துயின்ற பரமன்' என்று திருப்பாற்கடலில் பள்ளிகொண்ட

அழகையும் பாடிய ஆண்டாள் ''ஓங்கி உலகளந்த'' எனும் இப்பாட்டில் திரிவிக்கிரமனாக அவதரித்து உலகளந்த செய்தியைப் பாடி, தங்கள் நோன்பாலே உலகுக்கு உண்டாகும் பயனைக் கூறுகிறாள்.

தாய் உறங்குகிற குழந்தையைத் தழுவி உகப்பது போலே, தனது குழந்தைகளான உலகினர் அனைவரையும் திருவடிகளாலே தடவிக் கொடுத்து உகந்த உத்தமன் அவன். பிறரைக் காட்டிலும் அவன் மேலானவனாக இருப்பது போல், அடியார்கள் வாயில்நின்று உதவும் அவனது பெயர் அவனைக்காட்டிலும் மேலானதா யுள்ளது.

அந்தத் திருநாமங்களை வேறு பயன் கருதாது பாடி அதைச் சொல்லாவிடில் உயிர் தரிக்கமாட்டாத நாங்கள் ஊரார்க்கு நோன்பு என்ற ஒரு வியாஜத்தையிட்டுக் கண்ணனை அனுபவித்தால், நாடு முழுதும் வெள்ளக் கேடும் வறட்சிக்கேடும் இல்லாமல் மாதம் மும்மாரி பெய்யும். திரிவிக்கிரமனைப்போலே பெருத்தும் ஓங்கியும் செந்நெல் வளரும். அந்த நெற்கதிர்களின் நடுவே கயல் மீன்கள் திரியும். பூத்த குவளைப் பூவிலே அழிகய வண்டுகள் உறங்கும்; இது வயலின் செழிப்பு; இனி ஊரின் செழிப்பு எப்படி இருக்கும் எனில், ஊரில் பசுக்கள் சிறுபிள்ளைகளுக்கும் கட்டவும் அடிக்கவும் ஆம்படி நிற்கும். அவற்றைக் கறப்பதற்கு மிகுந்த நெஞ்சுரமும் கை வலிமையும் வேண்டும்.

பருத்த முலைக் காம்புகளை ஒருமுறை கையாலே பற்றி இழுத்தால் ஒரு குடம் பால்நிரம்பும். எத்தனை குடங்கள் இட்டாலும் பால் நிறைந்துகொண்டேயிருக்கும். குடங்கள் இல்லை என்ற குறை ஏற்படலாமேயொழிய இப்பசுக் களிடம் பால் இல்லை என்னும் குறை ஏற்படாது. புல்லும் தண்ணீரும் உணவாக வளர்ந்தவையன்றே இவை.

http://acharya.org

கண்ணனுடைய கைபட்டும் அவனது குழலோசையைக் கேட்டும் வளர்ந் தவையாகையாலே யானைபோலே பெருத்திருக்கும் இப்பசுக்கள்; இப்படி நீங்காத செல்வம் நிறைந்திடும். ஓங்கி உலகளந்தவன் அளித்த செல்வமன்றோ இது. திருவின் நாயகனால் வளரும் செல்வமன்றோ இது - என்று தங்கள் நோன்பினால் விளையும் பயனைப் பேசுகிறாள் ஆண்டாள்.

''கீழேழுலகமும் உற்ற அடியினை'' என்று மூன்றாம் பரிபாடலில் சங்கத்தமிழர் பாடியதுபோலவே ஆண்டாளும் ''ஓங்கி உலகளந்த உத்தமன்' என்று பாடுவது அனுபவிக்கத்தக்கது.

4. ஆழிமழைக்கண்ணா! ஒன்று நீ கைகரவேல்
ஆழியுள்புக்கு முகந்துகொடார்த்தேறி
ஊழிமுதல்வனுருவம்போல் மெய்கறுத்துப்
பாழியந்தோளுடைப் பற்பநாபன் கையில்
ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்க முதைத்த சரமழைபோல்
வாழ வுலகினில் பெய்திடாய் நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்.

உலகனைத்துக்கும் நாயகனான நாராயணன் கண்ணனாய்ப் பிறந்து ஆயர் சிறுமியர்க்கு வசப்பட்டிருப் பதைக் கண்ட வருணதேவன் ''நான் உங்களுக்குச் செய்யவேண்டுவது என்ன?'' என்று கேட்டான். அவன் செய்ய வேண்டிய காரியத்தைச் சொல்லுகிறார்கள் ''ஆழி மழைக் கண்ணா'' என்னும் இப்பாட்டில்.

கடல்போலே கம்பீரமானவனே! மழைக்குத் தலைவனே! உன்னுடைய வண்மையை நீ சிறிதும் குறைத்துக் கொள்ளக்

http://acharya.org

கூடாது. எங்களுக்கு மழை பொழிவதற்கு ஏரி, குளம் முதலானவற்றில் உள்ள நீர் போதாது. பெரிய கடலிலிருந்து, அதிலும் மேலாக மொண்டு கொண்டுவராமல் உள்ளே புகுந்து கடலிலுள்ள நீர் முழுவதையும் கொண்டுவர வேண்டும். நீ வரும்போதே உனது முழக்கத்தாலே வாழ்வித்துக்கொண்டு வர வேண்டும். ஆகாயம் முழுவதை யும் அடைத்துக்கொண்டு வரவேண்டும். உலகைப் படைக்கும் காலத்தில் ஊழி முதல்வனான எம்பெருமானு டைய உருவம்போல உனது உடல் கறுத்திருக்க வேண்டும். அவனைக்காணாத குறைதீர உன்னைக்கண்டு நாங்கள் களிக்க வேண்டும். பெருத்தும் அழகு பொருந்தியுமுள்ள பத்ம நாபனாகிற அவனுடைய தோளின்மேல் விளங்கும் சக்கரத்தாழ்வான்போலே நீ மின்னிக்கொண்டு வர வேண்டும். அவனுடைய மற்றொரு கையில் உள்ள வலம்புரிச் சங்குபோலே நீ முழங்கிக் கொண்டும் வரவேண்டும்.

நோன்பினால் வாடியிருக்கும் எங்கள் வடிவைக் கண்ட பின்பும் நீ காலதாமதம் செய்யலாகாது. கஜேந்திரனைக் காப்பாற்ற அவன் ஓடிவந்ததுபோலே வரவேண்டும். அவனுடைய சார்ங்கம் என்னும் பெரிய வில்லில் நின்றும் புறப்படும் அம்பு மழைபோலே மழைத்தாரையைப் பொழிந்துகொண்டு நீ வரவேண்டும். அம்புமழைபோலே அழித்துக்கொண்டு வரக்கூடாது. அனைவரும் வாழும் படியாகப் பெய்ய வேண்டும். அதனால் ஊரில் நீர்நிலைக ளெல்லாம் நிரம்பும். நாங்கள் மார்கழி நீராட்டத்தைச் செய்வோம். நீயும் எங்களுக்குக் குற்றேவல் செய்து பெருமைபெற்றவனா வாய். இதனால் எங்களுக்கும், கண்ணனுக்கும் ஊரிலுள்ள அனைவருக்கும் மகிழ்ச்சி ஏற்படும் என்கிறாள் ஆண்டாள்.

http://acharya.org

''கேழல் திகழ்வரக்கோலமொடு பெயரிய ஊழி ஒருவினை உணர்த்தலின் முதுமைக்கு ஊழியாவரும் உணரா, ஆழி முதல்வ'' ''பொன் அணிநேமி வலம் கொண்டு ஏந்திய மன்னிய முதல்வனை'' ''நால்வகை ஊழியெண் நவிற்றும் சிறப்பினை'' ''மாநிலம் இயலா முதன்முறை அமையத்து நாம் வெள்ளத்து நடுவண் தோன்றிய வாய்மொழி மகனொடு மலர்ந்த தாமரைப் பொகுட்டு நின் நேமி'' ''மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்பூ'' என்று சங்கத்தமிழர் பாடியதுபோலவே ஆண்டாளும் ''ஊழி முதல்வன்'' என்றும் ''பாழியந் தோளுடைப் பற்பநாபன் கையில் ஆழி'' என்றும் பாடியது சுவைக்கத்தக்கது.

5. மாயனை மன்னு வடமதுரை மைந்தனைத்
தூய பெருநீர் யமுனைத்துறைவனை
ஆயர்குலத்தினில் தோன்று மணி விளக்கைத்
தாயைக் குடல் விளக்கஞ் செய்த தாமோதரனைத்
தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித் தொழுது
வாயினாற்பாடி மனத்தினால் சிந்திக்கப்
போயபிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும் செப்பேலோ ரெம்பாவாய்.

''நல்ல காரியங்கள் செய்யும்போது பெரியோர்களுக்கும் கூடப் பல இடையூறுகள் உண்டாகின்றனவே. அப்படியே நம்முடைய நோன்புக்கும் இடையூறு உண்டானால் என்ன செய்வது?'' என்று ஆயர் சிறுமிகளில் ஒருத்தி கேட்க, அவர்களிலே வேதாந்த ஞானமுடைய மற்றொருத்தி 'பாலைப் பருகும்போது பித்தமும் தானே விலகுவது போலே, எம்பெருமானை அனுபவித்தால் பாபங்கள் பறந்தோடிப்போம்' என்று பதில் சொல்கிறாள் ''மாயனை'' எனும் இப்பாட்டில்.

http://acharya.org

ஆச்சரியமான பரமபதத்தில் நாராயணனாக எழுந்தருளி யிருப்பவன் இடையர்களுக்கும் பசுக்களுக்கும் தன்னை அனுபவிக்கக் கொடுப்பதற்காக வடமதுரையிலே பிறந்தான். இந்த வடமதுரை வாமனப் பெருமான் நெடுங் காலம் தவம்செய்த இடம். இராமாவதார காலத்தில் சத்ருக்னன் அரசாண்ட இடம். இப்போது கண்ணன் அவதரித்த இடமாகவும் ஆயிற்று. இப்படி எம் பெருமானோடு தொடர்பு மாறாத இந்த வடமதுரையிலே பிறக்கும்போதே தந்தை காலில் விலங்கை வெட்டிய பலமுடையவனாகவும், வடமதுரையில் உள்ளார்க் கெல்லாம் பிள்ளையாகவும், வடமதுரையார் மன்னனாகவும் பிறந்தவன் கண்ணன்.

பரமபதத்தைச் சுற்றி விரஜாநதி ஓடுவதுபோலே இந்த வடமதுரையைச் சுற்றி யமுனாநதி ஓடுகிறது. குழந்தையான கண்ணனை வஸுதேவர் ஆய்ப்பாடிக்கு எடுத்துச் செல்லும்போது தனது பெருவெள்ளத்தை வற்றிக்கொடுத்து அவருக்கு வழிவிட்ட தூய்மையுடையது இந்த நதி. இந்த யமுனையிலேயே ஆயர்சிறுமிகளான நம்மோடு விளையாடி ''யமுனைத் துறைவன்'' என்று பெயர் பெற்றவன் அக்கண்ணன். அவன் ஆயர் குலத்தினில் தோன்றிய பின்பே இருட்டில் விளக்குப்போலே விளங்கிநிற்கின்றான். யசோதை கட்டிய கயிற்றின் தழும்பைத் தன் வயிற்றில் உடையவனாய் அவளை விளங்கச் செய்கிறான் இந்தத் தாமோதரன்.

வேறுபயன் கருதாதவர்களாய் அவனிடம் நாம் வந்து, பயன் கருதாமையாலே தூய்மைபெற்ற மலர்களை அவன் திருவடிகளிலே தூவி, அவன் மிகப் பெரிதாக நினைக்கும் அஞ்ஜலியைச் செய்து, வாயினால்பாடி, மனத்தினால் நினைத்து இப்படி முக்கரணங்களும் படைத்த பயனைப்

http://acharya.org

பெற்று அவனை அனுபவித்தோமானால் அனாதி காலமாக நாம் செய்துவந்த பாபங்களும், இனி அறியாமல் செய்யும் பாபங்களும் நெருப்பிலிட்ட பஞ்சுபோலே அழிந்து போகும். அவனை வாயாரச் சொல்லுவாயாக என்கிறாள் ஆண்டாள்.

''மாஅயோயே! மாஅயோயே! மறுபிறப்பறுக்கும் மாசில் சேவடிமணிதிகழ் உருபின் மாஅயோயே'' ''இரு வினையு மில ஏத்துமவை'' என்று பரிபாடலில் சங்கத்தமிழர் பாடியது போலே சங்கத்தமிழ் மாலையில் ஆண்டாளும் ''மாயனை - தூமலர் தூவித்தொழுது, வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க, போய பிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசாகும்'' என்றது அறியத்தக்கது.

6. புள்ளும் சிலம்பினகாண் புள்ளரையன் கோயில்
வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ
பிள்ளா யெழுந்திராய் பேய்முலை நஞ்சுண்டு
கள்ளச் சகடம் கலக்கழியக் காலோச்சி
வெள்ளத்தரவில் துயிலமர்ந்த வித்தினை
உள்ளத்துக்கொண்டு முனிவர்களும் யோகிகளும்
மெள்ளவெழுந் தரியென்ற பேரரவம்
உள்ளம் புகுந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய்.

ஆறுமுதல் பதினைந்தாம் பாட்டுவரை, கண்ணனை அனுபவிப்பதற்குத் துணையாயிருக்கும் தோழிகளை எழுப்புகிறார்கள். பெருகிவரும் ஆற்றில் நீராடப் போகிறவர்கள் துணை தேடுவதுபோலே கண்ணனாகிற தடாகத்திலே நீராடப்போகும் இவர்களும் துணைதேடு கிறார்கள். கண்ணனுடைய திருமேனி தாமரை இலை போல் பசுமையானதாகவும், அவனது கண், கை, கால்கள் தாமரை மலர் போல் சிவந்தவையாகவும், அவனது சோதிச்

செவ்வாய் தாமரைமொட்டுப்போலவும் இருக்கையாலே கண்ணன் ஒரு நடமாடும் தாமரைத் தடாகம்போல் இருக்கிறானன்றோ. உணர்ந்து வந்த ஆயர் சிறுமிகள் உறங்குகின்ற புதியவள் ஒருத்தியை எழுப்புகிறார்கள் ''புள்ளும் சிலம்பின'' எனும் இப்பாட்டில்.

''விடியற்காலையில் எழுந்திருப்பதாகச் சொன்ன நீ அறிவற்றவையான பக்ஷிகள் உணர்ந்து இரை தேடுவதற்காக ஒலித்துக்கொண்டு போகத் தொடங்கிய பின்பும் உறங்கலாமோ?'' என்றார்கள் எழுப்புகிறவர்கள். உள்ளே இருப்பவள் ''நீங்கள் பண்ணும் பேரொலியைக் கேட்டு அவை உணர்ந்திருக்கக்கூடும். வேறு அடையாளம் உண்டோ?'' என்றாள். ''ஆயர்பாடியில் பறவைகளுக் கெல்லாம் அரசனான கருடனை வாகனமாகவும், கொடி யாகவும்கொண்ட ஸ்வாமியான திருமால் கோவிலில் வெளுத்த சங்கம் பொழுது விடிந்து விட்டது என்பதற்கு அடையாளமாகப் பேரொலி செய்வதையும் நீ கேட்க வில்லையா?'' என்றார்கள் எழுப்புகிறவர்கள்.

உள்ளே இருப்பவள் பேசாமலிருக்க, ''எம்பெருமானை அனுபவிப்பதில் புதியவளான பிள்ளாய்!'' என்று அவளை அழைக்கிறார்கள்; ''புதியவளாகையாலே பகவதநுபவத்தில் எல்லை நிலமான அடியார்களோடு கூடுவதின் சிறப்பை அறியாமல் கிடக்கிறாய் நீ. நாங்கள் உன்னைக் காண ஆசைப்படுவதுபோல் நீயும் எங்களைக் காண ஆசைப்பட வேண்டாமோ?'' என்றார்கள். ''உங்களுடைய பேச்சைக் கேட்டு உயிர் தரித்து நிற்கும் என்னை 'புதியவள்' என்பது பொருந்துமோ?'' என்றாள் உள்ளிருப்பவள். ''பேச்சைக் கேட்டுத் திருப்திபெறும் நீ புதியவளே. எழுந்திருந்து வந்து நாம் ஒருவர்க்கொருவர் வடிவையும் கண்டு நிறைவடை

http://acharya.org

வோம் வாராய்'' என்றார்கள். ''உங்களை யார் எழுப்பினார்கள்?'' என்றாள் உள்ளிருப்பவள். ''விடியற் காலையில் அடியார்களுடைய ஹரிநாம ஸங்கீர்த்தன ஒலியைக் கேட்டே எழுந்திருந்தோம்'' என்றார்கள் எழுப்புகிறவர்கள்.

''பூதனையாகிற பேயின் முலையில் விஷத்தையுண்டு அவளை அழித்து, வஞ்சனையோடு வண்டியாய் வந்த சகடாசுரனை உதைத்தழித்து, திருப்பாற்கடலில் ஆதிசேஷன் மேல் அறிதுயிலமர்ந்த க்ஷீராப்திநாதனை உள்ளத்தில் வைத்துக் கொண்டு எப்போதும் அவனுடைய குணங்களை அனுபவிக்கும் முனிவர்களும் அவனுக்கு அடிமை செய்யும் யோகிகளும் அந்தர்யாமியான அவன் அசையாதபடி மெள்ள எழுந்து ஹரி, ஹரி என்று ஒலிக்கும் பேரொலி எங்களது நெஞ்சில் புகுந்து எங்களை எழுப்பிற்று. நீயும் எழுந்திருப் பாயாக'' என்கிறார்கள்.

''செவ்வாய் உவணத்துயர்கொடி'' ''சேவலூர்தி'' என்று கருடக் கொடியையும், கருடவாகனத்தையும் ''ஆயிரம் விரித்த அணங்குடை அருந்தலை தீஉமிழ் திறனொடு முடிமிசை அணவர'' என்று ஆதிசேஷ சயனத்தையும் சங்ககாலச் சான்றோர்கள் பரிபாடலில் பாடியது போலே சங்கத்தமிழ் மாலையிலும் ''புள்ளரையன்'' என்று கருடனையும், ''வெள்ளத்தரவில் துயிலமர்ந்த வித்து'' என்று ஆதிசேஷ சயனத்தையும பாடியது சுவைக்கத் தக்கது.

7. கீசுகீசென் றெங்கு மானைச்சாத்தன் கலந்து
பேசின பேச்சரவம் கேட்டிலையோ பேய்ப்பெண்ணே!
காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து
வாச நறுங்குழலாய்ச்சியர் மத்தினால்
ஓசைபடுத்த தயிரரவம் கேட்டிலையோ

நாயகப் பெண்பிள்ளாய்! நாராயணன் மூர்த்தி
கேசவனைப் பாடவும் நீ கேட்டே கிடத்தியோ?
தேசமுடையாய் திறவேலோ ரெம்பாவாய்.

''கீசுகீசு'' எனத் தொடங்கும் இப்பாட்டில் எம்பெருமானின் சுவையறிந்தும் மறந்து கிடப்பாள் ஒருத்தியை எழுப்புகிறார்கள்.

''போது விடிந்தது எழுந்திராய்'' என்றார்கள். ''விடிந்ததற்கு அடையாளம் என்ன'' என்று கேட்டாள் உள் இருப்பவள். ''ஆனைச்சாத்தன் கீசுகீசு என்றதன்றோ'' என்றார்கள். ''ஓரிடத்தில் ஓர் ஆனைச்சாத்தன் கூவினதினால் போது விடிந்ததாகிவிடுமோ'' என்றாள் உள்ளிருப்பவள். ''கீசுகீசு என்று எங்கும் ஆனைச் சாத்தன் பேசின'' என்றார்கள் எழுப்புகிறவர்கள். ''உங்களுடைய ஒலியாலே உணர்ந்திருக் கலாமே அவை'' என்றாள் உள்ளிருப்பவள். ''அவை ஒன்றோடொன்று கலந்து பேசிய பேச்சன்றோ இது; இதையும் கேட்கவில்லையோ'' என்கிறார்ஈள். ''இவர் களுக்கு இதுதான் வேலை'' என்று பேசாமல் இருந்தாள்.

''அடியார்களோடு கூடுவதின் சுவையறிந்தும் மறந்து கிடக்கும் மதிகேடீ!'' என்கிறார்கள். ''வேறு அடையாள முண்டோ?'' என்று கேட்டாள். ''இவ்வூரில் பெண்கள் அச்சுத்தாலியும், ஆமைத்தாலியும் 'கலகல' என்று ஒலிக்கும்படி தயிர்கடையும் ஓசைகூட உன் காதில் விழவில்லையா? தயிரின் பெருமையாலும், தங்களுடைய மென்மையாலும் மலைபெயர்த்தாற்போல் கை பேர்த்தன்றோ கடைகிறார்கள். கடையும்போது மயிர்முடி அவிழ்ந்து அதிலுள்ள நறுமணம் வெள்ளமிடு வதையும் அறியவில்லையா? மந்தரமலையாலே திருப்பாற் கடலைக்

http://acharya.org

கலக்கினாற்போலே தயிர்கடையும் ஒலியும் உன்காதில் புகவில்லையா? என்றார்கள்.

''இவ்வூரில் கண்ணன் பிறந்த பிறகு தயிர்கடையாத நேரமுண்டோ'' என்றாள். ''நீ எங்களுக்கெல்லாம் தலைவி யாயிருப்பதற்கு இதுவோ அடையாளம்? சொன்னதற் கெல்லாம் பதில் சொல்வதே!'' என்கிறார்கள். ''உங்களது அடிமையான என்னைத் தலைவி என்று அழைக்கலாமோ?'' என்றாள். ''நாராயணனுடைய அவதாரமாய். கேசி என்னும் குதிரை வடிவில் வந்த அசுரனைக் கொன்ற கண்ணனைப் பாடிய பின்பும் கேட்டுக் கிடக்கலாமோ? உன்னுடைய பேரொளியானது காட்டில் எரிந்த நிலவாகாமல் உன்னைக் காணாமல் இருண்டு கிடக்கும் எங்களது நெஞ்சில் இருளை நீக்கும்படி கதவைத் திறப்பாயாக'' என்கிறார்கள்.

''மேவார் விடுத்தந்த கூந்தற்குதிரை வாய்ப்பகுத் திட்டுப் புடைத்த ஞான்று இன்னன்கொல் மாயோன் என்று உட்கிற்று என் நெஞ்சு'' என்று முல்லைக்கலி மூன்றாம் பாடலிலும், ''கூந்தல் என்னும் பெயரொடு கூந்தல் எரிசினம் கொன்றோய்'' என்று மூன்றாம் பரிபாடலிலும் கேசவன் என்ற பெயருடன் அவதரித்த கண்ணன் கேசியைக் கொன்ற செய்தியைப் பாடிய சங்கத்தமிழர்கள் போலே சங்கத் தமிழ் மாலையில் ''நாராயணன் மூர்த்தி கேசவனைப் பாடவும்'' என்கிறாள் ஆண்டாள்.

8. கீழ்வானம் வெள்ளென்று எருமை சிறுவீடு
மேய்வான் பரந்தனகாண் மிக்குள்ள பிள்ளைகளும்
போவான் போகின்றாரைப் போகாம மற்காத்து உன்னைக்
கூவுவான் வந்து நின்றோம் கோதுகலமுடைய
பாவாய் எழுந்திராய் பாடிப் பறைகொண்டு
மாவாய்பிளந்தானை மல்லரைமாட்டியங

http://acharya.org

தேவாதிதேவனைச் சென்று நாம் சேவித்தால்
ஆவாவென்றாராய்ந் தருளாலோ ரெம்பாவாய்.

''கீழ்வானம்'' என்று தொடங்கும் இப்பாட்டில் அனைவரும் வந்து அழைக்கும்படி கண்ணனால் விரும்பப் பட்டவள் ஒருத்தியை எழுப்புகிறார்கள்.

''கீழ்வானம் வெளுத்த பின்னும் உறங்கலாமோ'' என்றார்கள். ''திங்கள் திருமுகத்துச் சேயிழையாரான உங்கள் திருமுக ஒளிபட்டுக் கிழக்கு வெளுத்திருக்கக் கூடும்'' என்றாள். ''எருமைகள் பனிப்புல் மேய்வதற்காக வயல்க ளெங்கும் பரவிய அடையாளத்தையும் காணலாமே'' என்றார்கள். ''உங்களுடைய முகஒளியைக் கண்டு சிதறிப்போகிற இருளைப் பார்த்து எருமைகள் என்று மயங்குகிறீர்கள்; உங்களைத் தவிர மற்றவர்கள் உணராததிலிருந்தே விடியவில்லை என்று தெரிகிறதே'' என்றாள். ''உன்னைத்தவிர மற்ற எல்லோரும் கண்ணனைத் தேடித் திருவேங்கட யாத்திரைபோலே, போகையே பயனாகப் போனார்கள். நீ வரவில்லை என்று ஒரு வார்த்தை சொன்னவுடன் நின்றுவிட்டார்கள். உன்னை அழைப்பதற் காக நாங்கள் உன் வாசலில் வந்து நிற்கின்றோம்'' என்றார்கள்.

''அனைவரும் கூடி என் வாசலில் வந்து நிற்கக் காரணம் என்ன?'' என்றாள். ''கண்ணனாலே நீ மிகவும் வேண்டப் படுபவள் அன்றோ. நீ பெண்பிள்ளையாயிற்றே. பெண்ணின் - வருத்தமறியாத பெருமானைப் போலே எங்களைத் துடிக்க விடாமல் எழுந்திருப்பாயாக - நீ எழுந்திருக்கும் அழகைப் பார்க்கவே ஆசைப்படுகிறோம்'' என்கிறார்கள். ''எழுந்திருந்து நாம் பெறப்போகும் பயன் என்ன?'' என்றாள். ''கண்ணனின் குணங்களை அநுபவிக்கை யாலே

கங்குகரையற்றுப் பெருகும் ஆனந்தத்துக்குப் போக்கு விட்டுப் பாடுவது நமக்குப் பயன். நோன்புக்கு அங்கமான பறை கொள்வது ஊராருக்கான பயன். கேசி என்னும் குதிரை. சாணூர முஷ்டிகர்களாகிற மல்லர்கள் முதலிய விரோதிகளைக் கொன்று மதுரைப் பெண்களுக்குத் தன்னை உதவியவனாயிற்றே. தேவாதிதேவனாயிருந்தும் நமக்காக அவதரித்து வந்து இந்த அரிய செயல்களைச் செய்தானன்றோ! அவனை அணுகி நாம் சேவித்தால், 'ஐயோ' என்று இரங்கி நம் காரியத்தைச் செய்வான்'' என்கிறார்கள்.

குறிஞ்சிக் கலி பதினாறாம் பாடலில் ''மல்லரை மறஞ்சாய்த்த மால்போல்'' என்றும், நெய்தற்கலி பதினேழாம் பாடலில் ''மல்லரை மறஞ்சாய்த்த மலர்த்தண்டார் அகலத்தோன்'' என்றும், மூன்றாம் பரிபாடலில், ''பொருதிறல் மள்ள'' ''அமரர்க்கு முதல்வன் நீ'' என்றும் சங்கத் தமிழர்கள் கூறியதுபோலே சங்கத்தமிழ்மாலையில் ஆண்டாளும் ''மல்லரை மாட்டிய தேவாதி தேவனை'' என்கிறாள்.

9. தூமணிமாடத்துச் சுற்றும் விளக்கெரியத்
தூ(ம)பம்கமழத் துயிலணைமேல் கண்வளரும்
மாமான் மகளே! மணிக்கதவம் தாள் திறவாய்
மாமீர்! அவளையெழுப்பீரோ! உன்மகள் தான்
ஊமையோ அன்றிச் செவிடோ அனந்தலோ
ஏமப்பெருந்துயில் மந்திரப்பட்டாளோ?
மாமாயன் மாதவன் வைகுந்தனென்றென்று
நாமம் பலவும் நவின்றேலோ ரெம்பாவாய்.

''தூமணிமாடத்து'' என்று தொடங்கும் பாடலில் ''அவனுடைய சொத்தான நம்மை அழைத்துக்கொண்டு

போவது அவனுக்கே பொறுப்பு'' என்று கிடக்கிறவள் ஒருத்தியை எழுப்புகிறார்கள்.

அடியார்களுடைய திருமாளிகையின் அழகும் அவர்களோடு உள்ள உறவும் தங்களுக்கு மிகவும் ஆதரிக்கத்தக்கதாகையாலே, அவற்றைச் சொல்லி எழுப்புகிறார்கள் முதலில். ''இயற்கையாகவே தூய்மையான இரத்தினங்களாலே கட்டப்பட்டு ஒளிவிடும் மாளிகையில் மங்களத்தின் பொருட்டு எங்கு பார்த்தாலும் விளக்குகள் எரிய, அகிற்புகை முதலானவற்றின் நறுமணம் கமழ, படுத்தவுடன் உறங்க வைக்கும் படுக்கையில் படுத்துத் துயிலும் மாமன் மகளே!'' என்று அழைத்தார்கள். ''வெளியிலிருந்து திறக்கக்கூடிய தாளை நீங்களே திறந்துகொண்டு உள்ளே வாருங்கள்'' என்றாள்.

''மணிக்கதவாகையாலே பழக்கமில்லாத எங்களுக்குக் கதவுக்கும், சுவருக்கும், தாளுக்கும் வேற்றுமை தெரியவில்லை. ஆகையால் நீயே வந்து திறந்துவிடுவாய்'' என்கிறார்கள். ''இவர்கள் இப்படி வாசலில் துவளுவதைக் கண்டும் பேசாமலிருக்கை உனக்குத் தகுமோ?'' என்னும் கருத்துத் தோன்ற இருந்தாள் இவளுடைய தாயார், தூமணி மாடமாகையாலே அதைக்கண்ட தோழிகள் ''மாமீர்! அவளை எழுப்பீரோ!'' என்கிறார்கள். அப்பொழுதும் பேசாதேயிருக்கையாலே, ''உன் மகள் வாய்பேசமுடியாதவளாய் விட்டாளோ? வாய்பேசாதவளாயிருந்தாலும் கேட்டுவந்து திறக்கலாமே! காது கேளாதவளாகி விட்டாளோ? அல்லது நெஞ்சம் வேறிடத்தில் சென்று விட்டதோ? அல்லது காவல் இடப்பட்டுவிட்டாளோ? அல்லது பெருந்துயிலிலே ஆழும்படி எவரேனும் மந்திர வாதம் பண்ணிவிட்டார்களோ?'' என்றார்கள்.

அதைக்கேட்ட தாயார் ''மயங்கிக் கிடப்பவர்களைத் தண்ணீர் தெளித்துத் தெளிவிப்பதுபோலே, இவளையும் கண்ணனின் திருநாமங்களைச் சொல்லித் தெளிவடையச் செய்யுங்கள்'' என்றாள். ''நாங்கள் எத்தனையோ திருநாமங் களைச் சொல்லிவிட்டோம். ஆச்சரியமான குணங்களாலும் செயல்களாலும் எங்களை வெற்றி கொண்ட மாமாயன் என்றோம்; திருவின் கணவனான மாதவன் என்றோம்; மோக்ஷலோகமான வைகுந்தத்தை உடையவன் என்றோம். இப்படிச் சொன்ன திருநாமங் களுக்கு ஒரு கணக்கில்லை'' என்கிறார்கள்.

தொல்காப்பியத்திலிருந்து தொடங்கி எட்டுத் தொகை யிலும் பத்துப்பாட்டிலும் சங்கத்தமிழர்கள் பலவிடங்களில் முழங்கிய ''மாயோன்'' என்ற பெயரை ''மாமாயன்'' என்றும் ''திருவின்கணவ'' என்று பரிபாடலில் சொன்னதை ''மாதவன்'' என்றும், ''நாறு இணர்த்துழாயோன் நல்கின் அல்லதை ஏறுதல் எளிதோ வீறுபெறு துறக்கம்'' என்றும், ''அரிதின் பெருதுறக்கம்'' என்றும் பரிபாடலில் கூறியதை ''வைகுந்தன்'' என்றும் சங்கத்தமிழ்மாலையில் ஆண்டாள் அனுஸந்தித்தது அனுபவிக்கத்தக்கது.

10. நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்!
மாற்றமும் தாராரோ வாசல் திறவாதார்?
நாற்றத் துழாய்முடி நாராயணன் நம்மால்
போற்றப் பறைதரும் புண்ணியனால் பண்டொருநாள்
கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்பகரணனும்
தோற்றுமுனக்கே பெருந்துயில்தான் தந்தானோ?
ஆற்ற அனந்தலுடையா யருங்கலமே!
தேற்றமாய்வந்து திறவேலோ ரெம்பாவாய்.

''நோற்றுச் சுவர்க்கம்'' எனத் தொடங்கும் இப்பாடலில் கண்ணனையும் வசப்படுத்தி வைத்துக்கொண்டிருக்கும் ஒருத்தியை எழுப்புகிறார்கள்.

''நோற்க வேண்டிய நோன்பையெல்லாம் நோற்று, கண்ணனை அனுபவிப்பதாகிற ஸ்வர்க்கத்தை அடைந் திருக்கும் எங்கள் தலைவியே! வாசலை மூடினால் வாயையும் நீ மூட வேணுமோ! எங்கள் கண்களைப் பட்டினி போட்டாற்போலே காதையும் பட்டினி போடவேணுமோ? நீ பேரின்பத்தை அனுபவித்தால் எங்களைப் பற்றிக் கவலை கொள்ளக் கூடாதோ? எங்களைச் சித்திரவதை பண்ணினால் தாகத்துக்குத் தண்ணீராவது கொடுக்கக்கூடாதோ? உன்னு டைய கண்ணனைத் தராவிட்டால் எங்களுடைய உன்னைத் தரக்கூடாதோ? வாருங்கள் என்று சொல்லாவிட்டாலும் செல்லுங்கள் என்றாவது ஒரு வார்த்தை சொல்லக் கூடாதா?'' என்று கேட்டார்கள் எழுப்புகிறவர்கள்.

''நான் கண்ணனை அடைந்திருப்பதாகப் பழி சொல்லுகிறீர்கள். அவன் இங்கேயுண்டோ?'' என்றாள் உள்ளிருப்பவள். ''அவனு டைய திருத்துழாய் மணத்தை மறைக்க முடியுமோ? நாங்கள் அறியாமல் எங்கும் தோன்றக்கூடிய நாராயணன் அன்றோ அவன்'' என்றார்கள். பதில் சொல்லாமல் உறங்குவாரைப் போலே இருந்தாள் உள்ளிருப்பவள். ''கைம்முதல் ஒன்றுமில்லாத நமக்கும் மேலான சுகத்தை அளிக்கும் பரம தார்மிகனான அவனால் முன்பொருநாள் யமன் உலகுக்கு அனுப்பப்பட்ட கும்பகர்ணனும் உனக்குத் தோற்றுத் தன் தூக்கத்தையும் உனக்குத் தந்து போனானோ?'' என்றார்கள்.

http://acharya.org

''அரக்கனை நமக்கு ஒப்பாகச் சொல்லுவதா!'' என்று நினைத்து ''க்ருஷ்ண! க்ருஷ்ண!' என்று சோம்பல் முறித்தாள்.

''நீ விழிக்கும் அழகைக் காண்பதே போதுமே. கண்ணனும் தலையாலே தரிக்கும் ஆபரணம் போலிருப்பவளன்றோ நீ. தூக்க மயக்கத்தாலும் கிருஷ்ணாநுபவத்தாலும் தடுமாறாதே உன்னைச் சீர்படுத்திக்கொண்டு வந்து கதவைத் திறப்பாயாக'' என்கிறார்கள்.

''நாறிணர்த் துழாயோன்'' ''துளபம் சூடிய அறிதுயி லோனும்'' ''கள்ளணி பசுந்துளவினவை'' ''நறுந்தார்ப் புரிமலர்த் துழாஅய் மேவல் மார்பினோய்'' என்று பரிபாடலில் சங்கத்தமிழர் திருமாலுக்குரிய தனிமலர் மணம்மிக்க துளவம் என்றது போலே ஆண்டாளும் ''நாற்றத் துழாய்'' என்றாள். ''அவரவர் செய்பொருட்கு அரணமும் நீயே'' என்று பரிபாடலில் பாடியதுபோலே ஆண்டாளும் ''போற்றப் பறை தரும் புண்ணியன்'' என்றாள்.

11. கற்றுக் கறவைக் கணங்கள் பலகறந்து
செற்றார் திறலழியச் சென்று செருச் செய்யும்
குற்றமொன்றில்லாத கோவலர்தம் பொற்கொடியே!
புற்றரவல்குல் புனமயிலே! போதராய்
சுற்றத்துத்தோழிமா ரெல்லாரும் வந்து நின்
முற்றம் புகுந்து முகில்வண்ணன் பேர்பாட
சிற்றாதே பேசாதே செல்வப் பெண்டாட்டி! நீ
எற்றுக்குறங்கும் பொருளேலோ ரெம்பாவாய்.

''கற்றுக்கறவை'' என்று தொடங்கும் இப்பாட்டில், கண்ணன் ஊருக்கு ஒரு பிள்ளையானாற்போலே ஊருக்கு ஒரு பெண்பிள்ளையாயிருப்பவளாய், ஊரார் அனைவராலும் கொண்டாடப்படுகிறவள் ஒருத்தியை எழுப்பு கிறார்கள்.

http://acharya.org

''நீ ஆய்க்குலத்திற்கே அலங்காரமாய் விளங்கும் கொடி போலிருப்பவள். அவ்வாயர்குலம் எத்தகையது என்றால்,

கன்றுக்காகும் வயதிலேயே கண்ணன் கைபட்டுக் கறவை மாடுகளாயிருக்கும் பல பசுக்கூட்டங்களைக் கறக்கும் வலிமைபெற்ற குலம். கண்ணனுக்குத் தீங்குவிளைக்கும் எதிரிகளின் வலிமை அழியும்படியாக அவர்கள் இருக்கு மிடம் சென்று போர்புரியும் உத்தமவீரர்கள் நிறைந்த குலம் அது.

எதிரிகள் படையெடுத்து வரும்படியிருத்தல், போரிலே புறமுதுகிட்டு ஓடுதல், ஆயுதம் இல்லாதவர்களுடன் போர்புரிதல் முதலான வீரர்க்குரிய குற்றங்கள் எதுவும் இல்லாதவர்கள் நிறைந்த குலம் அது. இத்தகைய கோவலர்தம் பொற்கொடியாயிருக்கும் நீ புற்றிலிருக்கும் அரவு போன்ற அல்குலை உடையவள். மயில் தோகையைப் போன்ற மயிர்முடியையும், மயிலைப் போன்ற அழகையும் உடையவள் நீ. இத்தகைய நீ உன்னுடைய நடையழகையும் காட்டி எங்களை உயிர்தரிக்கப் பண்ணவேணும்'' என்றார்கள்.

''மற்ற எல்லாரும் வந்தார்களோ'' என்று கேட்டாள் உள்ளிருப்பவள். ''உனக்கு உறவுமுறையா யிருக்கும் இவ்வூரிலுள்ள தோழிமார் அனைவரும் உன்னைக் காண்பதையே பயனாகக் கொண்டு வந்து உன் முற்றத்திலே புகுந்து கார்மேக வண்ணனான அவனுடைய நிறத்தையும் வண்மையையும் கூறும் திருநாமங்களைப் பாடுகின்றோம். நாங்கள் இப்படிப் பாடியும் நீ சிறிதும் அசையாமலும் வாய்பேசாமலும் கிடக்கின்றாயே. நாங்கள் கண்ணனின் குணத்தைப் பாடுவதைக் கேட்டு மயங்கிக் கிடக்கிறாயோ? கண்ணன் ஊருக்கே செல்லப் பிள்ளையாயிருப்பது போல் நீ ஊருக்கெல்லாம் செல்லப் பெண்ணாய் இருப்பவளன்றோ; அத்தகைய உன்னை நாங்கள் பெறவேண்டாமோ? எங்கள்

http://acharya.org

கூக்குரலைக் கேட்டபின்பும் நீ எதற்காக உறங்கிக் கிடக்கின்றாய்?'' என்கிறார்கள்.

''இருஞ்சூல் வருமழை புரையும் மாமெய்'' ''யாவர்க்கும் சாயல் நினது நிறைவான் என்னும் நாவல் அந்தணர் அருமறைப்பொருளே'' என்று கார்மேகத்தைச் சங்கத் தமிழர்கள் பரிபாடலில் எம்பெருமான் திருமேனிக்கு உவமையிட்டதுபோலே ஆண்டாளும் ''முகில்வண்ணன்'' என்று பாடுவது காணத்தக்கது.

12\. **கனைத்திளங் கற்றெருமை கன்றுக் கிரங்கி**
நினைத்து முலைவழியே நின்று பால்சோர
நனைத்தில்லஞ் சேறாக்கும் நற்செல்வன் தங்காய்!
பனித்தலைவீழ நின்வாசற் கடைபற்றிச்
சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற
மனத்துக் கினியானைப் பாடவும் நீ வாய்திறவாய்
இனித்தானெழுந்திராய் ஈதென்னபேருறக்கம்?
அனைத்தில்லத்தாரு மறிந்தேலோ ரெம்பாவாய்.

''கனைத்து'' என்று தொடங்கும் இப்பாட்டில் ஸ்ரீரா மனைப் பிரியாது தொடர்ந்து அடிமை செய்யும் இலக்கு வனைப் போலே கண்ணனோடு கூடவேயிருந்து அடிமை செய்யும் ஒருவனுடைய தங்கையை எழுப்புகிறார்கள்.

''இவன் கண்ணனுக்குக் கைங்கர்யம் செய்வதிலேயே ஈடுபட்டிருப்பதால், இவன் வீட்டு எருமைகள் முலை கடுத்துக் கதறி தூரத்தில் கட்டி வைத்திருக்கும் இளங் கன்றுகளை நினைத்து, அந்நினைவின் முதிர்ச்சியாலே, கன்றின்வாய் வழியுமல்லாமல், கறப்பார் கைவழியு மல்லாமல், முலைவழியே பால் பொழியும். கன்றுகளின் நினைவு மாறாமையாலே இடைவிடாமல் பால் பொழியும். அந்தப் பாலின் மிகுதியினாலே வீடு முழுவதும்

வெள்ளம்போல் பெருக்கெடுத்து மிதிபட்டுச் சேறாகும். அதனால் எங்களால் உள்ளே வரமுடிய வில்லை'' என்றார்கள்.

''இப்படிப்பட்ட கிருஷ்ண கைங்கர்யமாகிற நல்ல செல்வத்தை உடையவனுடைய தங்கையே! அவன் எருமைகளைக் கறந்து ரக்ஷிக்காமல் இருப்பதுபோலே, நீயும் எங்களை ரக்ஷிக்காமல் இருப்பது பொருத்தமோ?'' என்று உணர்த்துகிறார்கள். ''ஆழி மழைக்கண்ணா - என்னும் பாட்டில் எங்களால் நியமிக்கப்பட்ட வருணதேவன் மேலே பனிமழையைப் பொழிகின்றான். கீழே பால் வெள்ளமிடுகிறது. நடுவே எங்கள் மாலாகிற அன்பு வெள்ளமிடுகின்றது. இவ்வெள்ளங்களில் கிடந்து தத்தளிக்கும் நாங்கள் உன் வாசல் நிலையைப் பற்றிநின்று நிலைபெறுகின்றோம். எங்களது இந்நிலையை அறியாமலிருக்கிறாயே'' என்றார்கள். இவர்கள் தனக்காகப் படும்பாட்டை இன்னும் சிறிதுநேரம் காண்பதற்காகப் பேசாமல் கிடந்தாள்.

பெண்களைப் படுத்தும் கண்ணனோடு பழகியதாலே இப்படிச் செய்யும் இவளைத் திருத்து வதற்காக, பெண்களுக்குத் தஞ்சமான ஸ்ரீராமபிரானின் குணங்களைச் சொல்லுகிறார்கள். ''பாகவதாபசாரத்தைக் கண்டு பொறாமல் கடும் கோபம் கொண்டு இராவணனைப் பூண்டோடு அழித்து நல்லவர்களைக் காப்பாற்றிய மனத்துக்கினியவனை நாங்கள் பாடிய பின்பும் நீ வாய் திறவாமல் இருக்கலாமோ? மனத்துக்கினி யானைப் பாடுவதற்காகவாவது எழுந்திருப்பாயாக. உன் உறக்கம் பேருறக்கமாயன்றோ இருக்கிறது. இதை இவ்வூரில் உள்ளார் எல்லாரும் அறிந்து விட்டார்கள். உனது தொடர்பாலே

http://acharya.org

அனைவரும் கண்ணனிடம் ஈடுபட்ட பின்பு நீ விரைவில் எழுந்திருப்பாயாக'' என்கிறார்கள்.

அகநானூற்றில் எழுபதாம் பாடலில் ''வெல்போர் இராமன்'' என்று சங்கத்தமிழர் பாடியதுபோலே ''சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற மனத்துக்கு இனியான்'' என்று சங்கத்தமிழ் மாலையில் ஆண்டாள் பாடியது காணத்தக்கது.

13. புள்ளின்வாய் கீண்டானைப் பொல்லாவரக்கனைக்
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப்போய்
பிள்ளைகளெல்லாரும் பாவைக்களம்புக்கார்
வெள்ளியெழுந்து வியாழ முறங்கிற்று
புள்ளும்சிலம்பினகாண் போதரிக்கண்ணினாய்
குள்ளக் குளிரக் குடைந்து நீராடாதே
பள்ளிக் கிடத்தியோ பாவாய்! நீ நன்னாளால்
கள்ளந்தவிர்ந்து கலந்தேலோ ரெம்பாவாய்.

''புள்ளின்வாய்'' என்று தொடங்கும் இப்பாட்டில் 'நம் கண்ணழகைப் பார்த்துக் கண்ணன் நம்மைத் தேடிவர வேண்டும்' என்று செருக்குடன் இருக்கும் ஒருத்தியை எழுப்புகிறார்கள்.

''கம்ஸனால் ஏவப்பட்ட ஓர் அசுரன் கொக்குருக் கொண்டு தீங்கிழைக்க வர, அக்கொக்கின் வாயைக் கிழித்தழித்தான் கண்ணன். அவனே இராமனாய் இருந்தபோது - தாயையும், தகப்பனையும் பிரிப்பாரைப் போலே தன்னையும் பிராட்டியையும் பிரித்த கொடியவனான இராவணனை விளையாட்டாக அழித்தொழித்தான். அவனுடைய வீரசரிதங்களைப் பாடிக் கொண்டு அப்பாட்டாலேயே உயிர்தரித்து நின்று ஆய்ப்பாடிச் சிறுமிகள்

அனைவரும் நோன்பு நோற்கும் இடத்துக்குச் சென்று விட்டார்கள். இனியாவது எழுந்திருப்பாயாக'' என்றார்கள்.

''அவர்கள் சிறுமிகளாகையாலே போதுவிடிவதற்கு முன் சென்று விட்டார்கள். வெள்ளி எனப்படும் சுக்ரன் உதயமான பிறகு வாருங்கள்'' என்றாள். ''சுக்ரன் உதித்து உச்சிப்பட்டும் விட்டது. வியாழன் அஸ்தமித்தும் விட்டது'' என்றார்கள். ''உங்களுக்கு நக்ஷத்திரமெல்லாம் வெள்ளியும், வியாழனு மாகவே இருக்கும்; வேறு அடையாளம் சொல்லுங்கள்'' என்றாள். ''பக்ஷிகள் கூட எழுந்து இரைதேடிக் கூவிப் போகின்றனவே. இவ்வடையாளம் போதாதோ'' என்றார்கள். ''அறிவற்ற பக்ஷிகளின் செயல் அடையாளம் ஆகாது'' என்று பேசாமல் கிடந்தாள்.

''பூவையும், மான்கண்ணையும் ஒத்த கண்ணை யுடையவள் என்னும் கர்வத்தினாலன்றோ நாங்கள் சொன்னதுக்கெல்லாம் பதில் சொல்லிக்கொண்டு கிடக் கிறாய். இக்கண்ணழகைக் கொண்டு கண்ணனை வசீகரித்து எங்களுக்கெல்லாம் தருவாய் என்றிருந்தோம். 'இக்கண்ணழ குடைய நம்மிடம் கண்ணன் வரட்டும்' என்று இதுவே காரணமாக நீ செருக்குற்றுக் கிடக்கலாமோ? சூரியன் உதித்து நீர்சுடுவதற்கு முன்னே ஆற்றில் குளிர்ந்த நீரில் உட்புகுந்து நீராடாமல் படுத்துக் கிடக்கலாமோ? கண்ணனும் கொண்டாடும் படியான பெண்களுக்குரிய எல்லா லக்ஷணங்களும் பொருந்தியவளாயிற்றே நீ. ஊராரும் இசைந்திருக்கும் நல்ல நாளல்லவோ இது. கண்ணனுடைய குணங்களையும், செயல்களையும் நினைத்துத் தனியே கிடக்கும் இக்கள்ளத்தைவிட்டு எங்களோடு கலந்து அனுபவிப்பாயாக'' என்கிறார்கள்.

சங்ககாலச் சான்றோர்கள் தொல்காப்பியத்தில் ''தாவா விழுப்புகழ் மாயோன்'' என்றும், முல்லைக்கலி மூன்றாம்

பாடலில் ''தேயாவிழுப்புகழ்த் தெய்வம்'' என்றும், நாலாம் பாடலில் ''பொரு முரண் மேம்பட்ட பொலம்புனை புகழ்நேமித் திருமறு மார்பன்'' என்றும், புறநானூறு ஐம்பத்தாறாம் பாடலில் ''புகழ் ஒத்தீயே இகழுநர் அடுநனை'' என்றும், அடுத்த பாடலில் ''புகழ்தல் உற்றார்க்கு மாயோன் அன்ன'' என்றும், முதற்பரிபாடலில் ''நின்னொக்கும் புகழ் நிழலவை - எண்ணிறந்த புகழவை'' என்றும், பதின்மூன்றாம் பரிபாடலில் ''நற்புகழவை'' என்றும் பாடியதுபோலே சங்கத்தமிழ் மாலையில் ஆண்டாளும் ''புள்ளின்வாய் கீண்டானைப் பொல்லா அரக்கனைக் கிள்ளிக்களைந் தானைக் கீர்த்திமை பாடி'' என்று பாடியது சுவைத்து இன்புறத்தக்கது.

14. உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள்
செங்கழுநீர் வாய்நெகிழ்ந் தாம்பல்வாய் கூம்பினகாண்
செங்கற் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர்
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போதந்தார்
எங்களை முன்ன மெழுப்புவான் வாய்பேசும்
நங்காய்! எழுந்திராய் நாணாதாய்! நாவுடையாய்!
சங்கொடு சக்கர மேந்துந் தடக்கையன்
பங்கயக் கண்ணானைப் பாடேலோ ரெம்பாவாய்.

''உங்கள் புழைக்கடை'' எனும் இப்பாட்டில் - தங்கள் கார்யங்களுக்கெல்லாம் முன் நிற்பவளாய், எல்லோரை யும் தானே எழுப்புவதாகச் சொல்லியிருந்தும் அதை மறந்து கிடப்பவளான ஒருத்தியை எழுப்புகிறார்கள்.

http://acharya.org

''எழுந்திராய்'' என்றார்கள். ''போது விடிந்ததோ?'' என்றாள். ''நீர்நிலைகள் எங்கும் செங்கழு நீர் மலர்ந்தும் ஆம்பல் குவிந்தும் இருப்பதைக் காணவில்லையோ?'' என்றார்கள். ''நீங்கள் அவற்றை அலர்த்தியும், குவித்தும்

விட்டிருப்பீர்கள்'' என்றாள். ''சூரியனும் நுழைய முடியாத உங்களுடைய புழைக்கடைத் தோட்டத்துக் குளத்திலன்றோ அவை மலர்ந்தும் குவிந்தும் இருக்கின்றன. அறிவற்ற அவையும் தங்கள் காரியங்களைச் செய்யும்போது நீ வெளியில்வந்து உன் காரியத்தைச் செய்யவேண்டாமோ?'' என்றார்கள். ''அவை இப்போதுதான் மலரவும், குவியவும் தொடங்கியிருக்கின்றன. வேறு அடையாளம் சொல்லுங் கள்'' என்றாள்.

''காஷாயம் உடுத்தவராய், வெற்றிலை முதலானவற்றை வெறுத்திருக்கையாலே வெளுத்த பற்களையுடையவரான முக்கோற்பகவர்களான த்ரிதண்டஸந்யாஸிகள் தங்கள் ஆச்ரமங்களில் திருவாராதனம் செய்யப்போகின்றனர். இனியாவது எழுந்திருப்பாயாக'' என்றார்கள். ''எப்போதும் கண்ணுறங்காமல் எம்பெருமானிடம் ஈடுபடும் அவர் களுடைய செயல் அடையாளமாகாது'' என்றாள். ''எல்லோருக்கும் முன் எழுந்து நானே உங்களை எழுப்பு கிறேன் என்று சொன்ன நீ, நாங்கள் எழுந்து வந்து உன்னை எழுப்பும்போது சொன்னதையெல்லாம் மறுத்துப் பேசுவது மிக அழகாயிருக்கிறது!'' என்று ஏசுகிறார்கள்.

அப்போதும் பேசாமலிருக்க ''எழுந்திருக்கா விடிலும், இவர்கள் அழைத்தும் எழாமலிருந்தோமே என்னும் வெட்கமும் அற்றவளாயிருந்தாயே! எங்கள் வார்த்தை களுக்கு ஏறுமாறாக பதில் சொல்லும் நாப்படைத்தவள் நீ. உன்னுடைய நாவன்மையே எங்களை உன்னிடம் இழுக்கிறது'' என்றார்கள். ''நான் உங்களுக்குச் செய்ய வேண்டுவது என்ன?'' என்று உள்ளிருப்பவள் கேட்க, ''சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையனும், தாமரைக் கண்ணனுமான கண்ணன் திருநாமங்களை உனது இனிய

http://acharya.org

குரலினாலே பாட வேண்டும் என்பதே எங்கள் கோரிக்கை, பால் குடிக்கக் கால்பிடிக்க வேணுமோ? விரைவில் எழுந்திருப்பாயாக'' என்கிறார்கள்.

''நேமியும் வளையும் ஏந்திய கையால்'' என்று சங்கத்தமிழர்கள் பதின்மூன்றாம் பரிபாடலில் தொகுத்துரைத்து, ''இடிஎதிர் கழறும் கால் உறழ்பு எழுந்தவர் கொடிஅறுபு இறுபு செவி செவிடுபடுபு முடிகள் அதிரப் படிநிலைதளர நனி முரல்வளை'' என்று சங்கத்தையும், ''முடியழிபு இழிபு தலையிறுபு தாரொடு புரள நிலை தொலைபு வேர்தூர்மடல் குருகு பறியா நீளிரும் பனைமிசைப் பல பதினாயிரங்குலை தரையுதிர்வ போல் நில்லாது ஒருமுறை கொய்பு கூடி ஒருங்குருண்டு பிளந்து நெரிந்து உருள்பு சிதறுபு போரடு குரிசில்! நீ ஏந்திய படையே'' என்று சக்கரத்தையும், ''கண்ணேபுகழ்சால் தாமரை அலர் இணைப்பிணையல்'' என்று தாமரைக் கண்ணையும் இரண்டாம் பரிபாடலில் விரித்துரைத்ததையே ''சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன் பங்கயக் கண்ணான்'' எனச் சங்கத்தமிழ் மாலையில் ஆண்டாள் தொகுத்துரைத்தாள்.

15. எல்லே யிளங்கிளியே! இன்னமுறங்குதியோ
சில்லென்றழையேன் மின் நங்கைமீர்! போதருகின்றேன்
வல்லையுன் கட்டுரைகள் பண்டேயுன் வாயறிதும்
வல்லீர்கள் நீங்களே நானேதானாயிடுக
ஒல்லைநீ போதா யுனக்கென்ன வேறுடையை
http://acharya.org
எல்லாரும் போந்தாரோ போந்தார் போந்தெண்ணிக்கொள்
வல்லானை கொன்றானை மாற்றாரை மாற்றழிக்க
வல்லானை மாயனைப் பாடேலோ ரெம்பாவாய்.

அச்சுதன் அடியார்கள் அனைவரையும் காண ஆசைப் பட்டிருக்கும் வைஷ்ணவ நிலையில் சிறந்த ஒருத்தியை எழுப்புகிறார்கள் இப்பாட்டில். திருப்பாவையில் ஸார மானது இப்பாட்டு.

சென்ற பாட்டில் ''பங்கயக் கண்ணானைப்பாட'' என்று இவர்கள் எழுப்புவதைக் கேட்டு, அப்பாட்டிலே மயங்கி, தன் இனிய குரலாலே அதைப் பாடத் தொடங்கினாள். அதைக் கேட்ட இவர்கள், ''இளங்கிளிபோலே உன் குரல் எத்தனை இனிமையாயிருக்கிறது!'' என்றார்கள். அவள் பேசாமல் இருக்க ''நாங்கள் அனைவரும் வந்தபின்பு இனியும் உறங்கலாமோ?'' என்றார்கள். தான் பங்கயக் கண்ணனைப் பாட - என்னும் பாசுரத்தை அனுஸந்திப் பதற்கு இடையூறாயிருக்கையாலே ''சில்லென்றழை யேன்மின்'' என்று சீறினாள். ''எங்களைக் காண்பதும், எங்கள் பேச்சைக் கேட்பதும் உனக்குப் பொறுக்க வொண்ணாதிருப்பது நீ நிறைவு பெற்ற நங்கையாயிருப்ப தாலன்றோ'' என்றனர்.

''நீங்களே குறைவற்ற நங்கைகள். என்னைப் படுத்தாதீர்கள். நான் இதோ வருகின்றேன்.'' என்று பதில் சொன்னாள். ''எங்களை வெறுத்துரைத்த தோடல்லாமல் எங்கள் மேல் குற்றமாம்படி நீ பேசவல்லவள் என்பதை நாங்கள் நெடுங்காலமாக அறிவோம்'' என்றார்கள். ''என்னைக் கடுஞ்சொற்கள் பேசிய நீங்களன்றோ வல்லவர்கள்'' என்றாள் உள்ளிருப்பவள்.

''சில்லென்றழையேன்மின் என்று நீயன்றோ முதலில் http://acharya.org சீறினாய்'' என்றார்கள். ''நான் கண்ணனின் குணங்களில் ஈடுபடுவதற்கு உங்கள் பேச்சு தடையாயிருக்கையாலே அப்படிச்சீறியது குற்றமல்ல'' என்றவள், ''அடியார்களோடு வாதம் புரிவது அழகல்ல'' என்று உணர்ந்து, ''நானே

குற்றவாளியாயிருக்கட்டும்'' என்று குற்றத்தைத் தன்னிடமே இசைந்து, ''உங்களுக்கு என்ன செய்ய வேண்டும்?'' என்று கேட்டாள். ''நீ விரைவில் வந்து எங்களோடு சேரவேண்டும்'' என்றார்கள். அப்போதும் துடித்துக்கொண்டு வராமையாலே ''எங்களை விட்டுத் தனியே ஒரு பகவதனுபவத்தை நீ செய்கின்றாயோ?'' என்று கோபித்தார்கள்.

இவளும் தன் தவறை உணர்ந்து ''உங்களையொழிய எனக்கு ஓர் இன்ப முண்டோ? அனைவரையும் சேர்த்துப் பார்க்கவன்றோ ஆசைப் படுகிறேன். எல்லோரும் வந்துவிட்டார்களோ?'' என்று கேட்டாள். ''வந்து விட்டார்கள். நீ இங்குவந்து எண்ணிக்கொள்'' என்றார்கள். ''நாம் கூடிச் செய்ய வேண்டியது என்ன?'' என்றாள். ''வலிய யானையாகிய குவலயாபீடத்தைக் கொன்றவனும், எதிரிகளை அழிக்க வல்லவனும், நமக்குத் தோற்று நின்று நம்மை வெற்றி கொள்ளும் மாயனுமான கண்ணனைப் பாடுவதே நாம் செய்ய வேண்டுவது'' என்கிறார்கள்.

''மறனும், மாற்றலர்க்கு அணங்கும் நீ'' என்று முதற்பரிபாடலில் சங்கத் தமிழர் பாடியதையே சங்கத் தமிழ்மாலையில் ''மாற்றாரை மாற்றழிக்கவல்லானை'' என்று ஆண்டாள் பாடியது நோக்கத்தக்கது.

16. நாயகனாய் நின்ற நந்தகோபனுடைய
கோயில்காப்பானே! கொடித்தோன்றும்தோரண
வாயில் காப்பானே! மணிக்கதவம் தாள் திறவாய்
ஆயர் சிறுமியரோமுக்கு அறைபறை
மாயன் மணிவண்ணன் நென்னலே வாய்நேர்ந்தான்
தூயோமாய் வந்தோம் துயிலெழப் பாடுவான்
வாயால் முன்ன முன்னம் மாற்றாதேயம்மா! நீ
நேய நிலைக்கதவம் நீக்கேலோ ரெம்பாவாய்.

பெண்கள் அனைவரும் கூடிவந்து நந்தகோபருடைய திருக்கோயில் காப்பானையும், திருவாசல் காப்பானையும் எழுப்புகிறார்கள் இப்பாட்டில்.

''ஸ்ரீநந்தகோபர் திருமாளிகைக்குக் காவலாய் எங்களுக்கு ஸ்வாமியாயிருப்பவரே!'' என்று அழைத்தவுடன், அவரும் கண்பார்வையாலே அவர்களை உள்ளே அனுமதிக்க, உள்ளே சென்று ''கொடித்தோன்றும் தோரணவாயில் காப்பானே! என்று கொடிகட்டியிருக்கும் திருவாசல் காக்கும் துவாரபாலகரை எழுப்புகிறார்கள். ''மணிவண்ணனான அவனை உள்ளே கொண்டிருக்கும் மணிக்கதவைத் திறந்துவிட்டு எங்களை உள்ளே விடவேண்டும்'' என்று யாசிக்கிறார்கள்.

''இவ்வூரில் முளைக்கும் பூண்டுகள் எல்லாம் கம்ஸனால் அனுப்பப்பட்ட அசுரர்களாயிருக்கும் போது உங்களை நம்பி எப்படி உள்ளே விடுவது?'' என்றார் துவாரபாலகர். ''நாங்கள் பெண்களாயிற்றே'' என்றார்கள். ''சூர்ப்பணகையும், பூதனையும் பெண்களல்லவோ?'' என்றார். ''ஆயர் சிறுமிகளாகிற எங்களுடைய பருவத்தைக் கண்டாலே வஞ்சனை அற்றவர்கள் என்று தோன்ற வில்லையா?'' என்றார்கள்.

''வத்ஸாஸுரன் இளங்கன்றாகவே கண்ணனை நலிய வந்தான்; ஆகையால் பருவத்தைக் கொண்டு மட்டும் நம்பமுடியாது. நீங்கள் வந்த காரியத்தைச் சொல்லுங்கள்'' என்றார். ''எங்களுடைய நோன்புக்குப் பறை ஒன்றை இப்போது தருவதாகக் கண்ணன் நேற்றே வாக்களித்திருக்கிறான். மிக உயர்ந்தவனாயினும், எங்களிடம் தாழ நின்று காரியம் செய்யும் மாயன் அவன். கொடியவனானாலும் விடவொண்ணாத நீலமணி போன்ற வடிவழகை உடையவன்'' என்றார்கள்.

''நீங்களோ பறையாகிற பயன் கருதி வந்ததாகச் சொல்லுகிறீர்கள். ஆகையால் உங்களை நம்புவதற்கில்லையே'' என்றார் துவாரபாலகர். ''ஊராருக்குப் பறையை வேண்டினோமேயன்றி நாங்கள் அவனைத்தவிர வேறு எதையும் வேண்டாத தூய்மை உடையவர்கள். விடியற்காலையில் அவனுக்குத் திருப்பளியெழுச்சி பாடவே வந்தோம்'' என்றார்கள்.

இவர்களைச் சோதிப்பதற்காக அப்போதும் தடுக்க நினைத்தார். ''நெஞ்சாலே நினைத்தாலும் வாயாலே தடுத்து விடாதீர். நீர் எங்களுக்கு ஸ்வாமியல்லவோ'' என்றனர். இனியும் தடுத்தால் உயிர் இழப்பார்கள் என்று உணர்ந்து ''நீங்களே கதவைத்திறந்து கொண்டு உள்ளே செல்லுங்கள்'' என்றார். ''இக்கதவு உன்னைக் காட்டிலும் கண்ணனிடம் பரிவுடையது. நாங்கள் அனைவரும் சேர்ந்து தள்ளினாலும் திறவாது, நீயே அதைத் திறக்கவேணும்'' என்று வேண்டுகிறார்கள்.

''அவரவர் ஏவலாளனும் நீயே'' என்று 'எம்பெருமான் பக்தபராதீனன்' என்று சங்கத்தமிழர் நாலாம் பரிபாடலில் கூறியதையே, ஆண்டாள் 'மாயன்' என்னும் திரு நாமத்தால் இங்கு உணர்த்துகிறாள். ''நின்னது திகழொளி சிறப்பிருள் திருமணி'' என்று இரண்டாம் பரிபாடலில் சங்கத்தமிழர் பாடியதையே சங்கத் தமிழ்மாலையில் ''மணிவண்ணன்'' என்னும் திருநாமத்தால் ஆண்டாள் உணர்த்துகிறாள்.

17. அம்பரமே தண்ணீரே சோறேயறஞ்செய்யும்
எம்பெருமான் நந்தகோபாலா! எழுந்திராய்
கொம்பனார்க்கெல்லாம் கொழுந்தே! குலவிளக்கே!
எம்பெருமாட்டி! யசோதாயறிவுறாய்
அம்பரமூடறுத் தோங்கி யுலகளந்த

உம்பர்கோமானே! உறங்காதெழுந்திராய்
செம்பொற் கழலடிச் செல்வா! பலதேவா!
உம்பியும் நீயுமுறங்கேலோ ரெம்பாவாய்.

இப்பாட்டில் உள்ளே சென்ற ஆயர் சிறுமிகள் முதலில் படுத்திருக்கும் நந்தகோபாலரையும், அடுத்தபடி வரிசை யாகப்படுத்திருக்கும் யசோதையையும், கண்ணனையும், பலராமனையும் எழுப்புகிறார்கள்.

முதற்கட்டில் படுத்திருக்கும் நந்தகோபரை அவருடைய வண்மையைச் சொல்லி எழுப்புகிறார்கள். ''ஊராருக் கெல்லாம் வஸ்திரம் முதலான போக்யப் பொருள்களையும், தண்ணீர் முதலான தாரகப் பொருள்களையும், சோறு முதலான போஷகப் பொருள்களையும் வேண்டுவோர் வேண்டும் வரையில் வழங்கும் நீர் எங்களுக்கு உண்ணும் சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலை முதலான எல்லாமா யிருக்கும் கண்ணனை வழங்கவேண்டாமோ? நீர் எங்களுக்கு ஸ்வாமியாயிற்றே. உம் பேர் சொல்லி அழைக்கலாம்படி எங்களுக்கு வசப்பட்டவராயிற்றே. நீர் எழுந்திருந்து எங்களை உள்ளே விடவேண்டும்'' என்றார்கள்.

அவரும் முகக்குறியாலே உள்ளே அனுமதிக்க, இரண்டாம் கட்டிலிருக்கும் யசோதைப் பிராட்டியைத் தங்களுக்குத் தலைவியாயிருக்கும் உறவைச் சொல்லி எழுப்புகிறார்கள். ''யசோதைப் பிராட்டியே! வஞ்சிக் கொம்பு போலிருக்கும் பெண்களுக்கெல்லாம் தலைவியா யிருப்பவள் நீ. கொம்புக்கு ஒரு குறைவந்தால் கொழுந்து வாடுவது போலே, எங்களுக்கு ஒரு குறை வந்தால் நீயே வாடுவாய். எங்களுக்கும் உன் குலத்துக்கும் மங்களவிளக்கு போன்றிருப்பவள் நீ. எங்களுக்குக் கண்ணனைப் பெற்றுக் கொடுத்து ஸ்வாமினியாயிருப்பவள் நீ. யசோதை என்னும்

http://acharya.org

பெயர் படைத்த நீ புகழுக்கு இருப்பிடமான கண்ணனை எங்களுக்கு வழங்க வேண்டாமோ? நீ உணர்ந்தாலே எங்கள் குறை தீரும்'' என்றார்கள்.

யசோதை உணர்ந்தமை தோற்ற இருக்க, உள்ளே சென்று மூன்றாங்கட்டிலுள்ள கண்ணனை எழுப்புகிறார்கள். ''வானளாவ வளர்ந்து எல்லா உலகங்களையும் அளந்து கொண்ட தேவதேவனே! உறங்காமல் எழுந்திருப்பாயாக'' என்றார்கள். இப்படி எழுப்பியும் ''அண்ணனான பலராமனை எழுப்பாமல் நம்மை எழுப்பினது முறையல்ல'' என்று பேசாமல் கிடக்க, நாலாவது கட்டில் துயின்ற பலராமனை எழுப்புகிறார்கள்.' 'செம்பொன்னாலான வீரக்கழலை அணிந்தவனாய், கைங்கர்யச் செல்வம் நிறைந்தவனான பலதேவனே! உன் தம்பியாகிற கண்ணனும், அவனுக்கு வசப்பட்டிருக்கும் நீயும் உறங்காமலிருந்து எங்களை ரக்ஷிக்க வேண்டும்'' என்கிறார்கள்.

''கீழேழுலகமும் உற்ற அடியினை'' ''இவ்வுலகம் தந்து அடிப்படுத்ததை'' என்று சங்கத்தமிழர் பரிபாடலில் சொன்னபடியே ''அம்பரமூடறுத்து ஓங்கி உலகளந்த உம்பர் கோமானே'' என்றும், ''வளையொடு புரையும் வாலியோற்கு அவன் இளையன் என்போர்க்கு இளையை ஆதலும், புதையிருள் உடுக்கைப் பொலம்பனைக் கொடியோற்கு முதியை என்போர்க்கு முதுமை தோன்றலும்'' என்று பரிபாடலில் கூறியதை ''செம்பொற்கழலடிச்செல்வா பலதேவா உம்பியும் நீயும்'' என்றும் சங்கத்தமிழ்மாலையில் ஆண்டாள் பாடினாள்.

http://acharya.org

18. உந்து மதகளிற்ற னோடாத தோள்வலியன்
நந்தகோபாலன் மருமகளே! நப்பின்னாய்!
கந்தம் கமழும் குழலீ! கடை திறவாய்

வந்தெங்கும் கோழியழைத்தனகாண் மாதவிப்
பந்தல்மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண்
பந்தார்விரலி! உன் மைத்துனன் பேர்பாடச்
செந்தாமரைக்கையால் சீரார்வளையொலிப்ப
வந்து திறவாய் மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்.

கண்ணனோடு தங்களைச் சேரவிடும் புருஷகாரமாயிருக்கும் நப்பின்னைப் பிராட்டியை முன்னிடாமையாலேயே கண்ணன் எழுந்திராமல் இருக்கிறான் என்று உணர்ந்து நப்பின்னைப் பிராட்டியை எழுப்புகிறார்கள் ''உந்துமதகளிற்றன்'' எனும் இப்பாட்டில்.

''மதங்கொண்ட யானைகளையும் தள்ள வல்லவரும், போரிலே புறமுதுகிடாத தோள்பலத்தை உடையவருமான நந்தகோபரின் மருமகளே!'' என்று அழைத்தார்கள். ''கும்பர் மகளே! என்பதைக் காட்டிலும் ''நந்தகோபாலன் மருமகளே'' என்று அழைப்பதாலேயே உகக்கக் கூடியவளன்றோ இவள். 'ஆயர் சிறுமிகள் அனைவரும் கண்ணனுக்கு தேவிகளாகையாலே இது யாரையும் குறிக்கலாம்'' என்று அவள் பேசாமல் கிடக்க, ''நப்பின்னாய்!'' என்று இவளைப் பேரையிட்டு அழைக்கிறார்கள். ''பேசாமலிருந்தால் நான் இங்கில்லை என்று நினைத்துச் சென்று விடுவார்கள்'' என்று நினைத்து மறுபடியும் பேசாமல் இருந்தாள்.

இவள் நினைவை ஊகித்தறிந்து ''நறுமணம் கமழும் குழலை உடையவளே! நீ வாய் திறவாயாகிலும், உனது குழலின் நறுமணம் உன்னைக் காட்டிக்கொடுத்துவிட்டது. உள்ளே வெள்ள மிடும் நறுமணத்தை அணைபோடாமல் நாங்களும் அதில் குடைந்தாடும்படி வெட்டிவிடுவாய்'' என்றார்கள். ''நடுநிசியில் வந்து எழுப்பினால் கதவு திறக்க

http://acharya.org

முடியுமோ'' என்று கேட்டாள் நப்பின்னை. ''கோழிகள், அதிலும் எங்குமுள்ள கோழிகள் கூட்டமாக வந்து எங்களைப்போலே உன்வாசலில் வந்து அழைக்கின்றன; விடிந்தமைக்கு இவ்வடையாளம் போதாதோ?'' என்றார்கள். ''சாமக்கோழி கூவிக்கூவி அடங்கிவிடுவது போலே இவையும் அடங்கிவிடும். வேறு அடையாளம் உண்டோ?'' என்று கேட்டாள். ''குயில் கூட்டங்கள், அதிலும் மாதவிப்பந்தல் மேல் நன்கு உறங்கும் குயில் கூட்டங்கள் பலகால் கூவியதிலிருந்தே விடிந்தது என்று தெரியவில்லையோ?'' என்றார்கள்.

''குயில்களைப் பயமுறுத்தி நீங்கள் கூவச் செய்திருக்கக் கூடும்'' என்று கூறிப் பேசாமல் கிடந்தாள். ''பந்து விளையாட்டிலே கண்ணனை வெற்றிகொண்டு அவனை ஒரு கையாலும், பந்தை ஒரு கையாலும் அணைத்துக் கிடக்கும் செருக்காலேயன்றோ நாங்கள் சொன்னதுக் கெல்லாம் பதில் சொல்லிக்கொண்டு கிடக்கிறாய்'' என்று வருந்திப் பேசினார்கள். ''நீங்கள் வந்த கார்யம் என்ன?'' என்றாள் நப்பின்னை. ''உன்னுடைய வெற்றியையும், அவனுடைய தோல்வியையும் பாடவந்தோம்'' என்றார்கள். ''நீங்களே திறந்து உள்ளே புகுங்கள்'' என்றாள். ''உன் செந்தாமரைக் கையால் அக்கையில் உள்ள அழகிய வளையல்கள் ஒலிக்கும்படியாக உன் கார்யம் செய்வதாக மகிழ்ந்து நீயே வந்து திறக்கவேணும்'' என்கிறார்கள்... திருக்கோட்டியூர் நம்பி திருமாளிகை முன் இப்பாட்டைச் சொல்லிக்கொண்டு எம்பெருமானார் வரும்போது நம்பி மகளான தேவகிப்பிராட்டி கதவைத் திறக்க, அவளை நப்பின்னைப் பிராட்டியாக எண்ணி வணங்கினார் ஸ்ரீராமாநுஜர்'' என்று அருளிச்செய்வர். வார்த்தமாலை முதலிய பலநூல்களில் இப்படியே உள்ளது.

http://acharya.org

''திருவின் கணவ'' என்று சங்கத்தமிழர் ஸ்ரீதேவிநாயக னாகப் பரிபாடலிலே அழைத்ததுபோலே ''நப்பின்னாய்! உன் மைத்துனன்'' என்று சங்கத்தமிழ் மாலையில் ஆண்டாள் கண்ணனை நீளா நாயகனாக அழைக்கிறாள்.

19. குத்துவிளக்கெரியக் கோட்டுக்காற் கட்டில்மேல்
மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறி
கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்
வைத்துக்கிடந்த மலர்மார்பா! வாய்திறவாய்
மைத்தடங் கண்ணினாய்! நீயுன் மணாளனை
எத்தனைபோதும் துயிலெழுவொட்டாய்காண்
எத்தனையேலும் பிரிவாற்றகில்லாயால்
தத்துவமன்று தகவேலோ ரெம்பாவாய்.

''குத்துவிளக்கெரிய'' என்று ஆரம்பிக்கும் இப்பாட்டில் கண்ணனையும், நப்பின்னையையும் மாறி மாறி எழுப்புகிறார்கள்.

சென்ற பாட்டில் எழுப்பப்பட்ட நப்பின்னை எழுந்திருக்க முற்பட ''நம்மைப் பற்றின இவர்களுக்கு இவள் முற்படக்கூடாது'' என்று கண்ணன் அவளை எழுந்திராதபடி அணைத்தான். அவனை எழுப்புகிறார்கள் பாட்டின் முற்பாதியில். இவர்கள் படுத்திருக்கும் படுக்கையறையில் குத்துவிளக்கு எரிகின்றது. யானைத் தந்தங்களால் செய்த கால்களையுடைய கட்டிலிலே மெத்தென்றிருக்கும் பஞ்சணையின் மேலே கொத்தாக மலர்ந்த பூக்களை அணிந்த நப்பின்னைப் பிராட்டி படுத்திருக்கின்றாள். அவள் எழுந்திருக்க முடியாதபடி அவளுடைய மார்பகங்களைத் தன் திருமார்பால் அணைத்துப் பிடித்துக் கொண்டிருக்கிறான் கண்ணன்.

அக்காட்சியை அப்படியே வர்ணித்து ''வாய் திறவாய்'' என்று கண்ணனை அழைக்கின்றார்கள், ''பெருமானையும், பிராட்டியையும் பிரிக்கக்கூடாது'' என்று ''எழுந்திராய்'' என்று கூறாமல் 'இருந்த இடத்திலிருந்தே ஒரு வாய் வார்த்தை சொல்லுவாய்' என்கிறார்கள். உடனே வாய்திறக்கப் புகுந்த கண்ணனை நப்பின்னை ''நம்மவர் களுக்கு இவன் முற்படக்கூடாது'' என்று வாய் திறவாமலி ருக்கும்படி சைகை செய்ய, கண்ணன் பேசாமல் இருந்தான். மறுபடியும் அவளை எழுப்புகிறார்கள். ''கறுத்த பெரிய கண்ணையுடையவளே! எங்களை அவனோடு சேர்க்க வேண்டிய கண்ணழகு பிரிக்கப் பயன்படலாமோ? அவன் நினைவாகவே இருக்கும் நீ உன் நினைவொழிய வேறறியாத அவனை ஒரு கணநேரமும் படுக்கையை விட்டு எழ மறுக்கிறாயே. இதற்குக் காரணம் நீ அவனைக் கணநேரமும் பிரிய முடியாதவளாயிருப்பது தான். எங்களையும், அவனையும் சேர்க்கும் உன்னுடைய புருஷகாரமாகிற தனித் தன்மைக்கும் இது பொருந்தாது. உன்னுடைய கருணையா கிற குணத்துக்கும் இது பொருந்தாது'' என்கிறார்கள்.

''நின் திருவரையகலம் தொழுவோர்க்கு உரிதமர் துறக்கமும் உரிமை நன்குடைத்து'' என்று சங்கத் தமிழர் பரிபாடலில் மோட்சத்தை அடைவதற்கு ஸ்ரீதேவியைப் புருஷகாரமாகக் கொண்டதுபோலே சங்கத்தமிழ் மாலையில் ஆண்டாள் கண்ணனை அடைவதற்கு நப்பின்னையைப் புருஷகாரமாகக் கொள்கிறாள். கிருஷ்ணாவதாரத்தில் அதுவும் ஆய்ப்பாடியில் நப்பின்னையே முக்கியமான பிராட்டியாயிருக்கிறாளன்றோ. இவளைப் பரமபதத்தி லுள்ள நீளா தேவியின் அவதாரமென்று கூறுவர்.

http://acharya.org

20. முப்பத்துமூவ ரமரர்க்கு முன்சென்று
கப்பம் தவிர்க்கும் கலியே! துயிலெழாய்
செப்பமுடையாய்! திறலுடையாய்! செற்றார்க்கு
வெப்பம்கொடுக்கும் விமலா! துயிலெழாய்
செப்பன்ன மென்முலைச் செவ்வாய்ச் சிறுமருங்குல்
நப்பின்னை நங்காய்! திருவே! துயிலெழாய்
உக்கமும் தட்டொளியும் தந்துன் மணாளனை
இப்போதே யெம்மை நீராட்டேலோ ரெம்பாவாய்.

சென்ற பாட்டில் எழுப்பப்பட்ட நப்பின்னைப் பிராட்டி "தக்க சமயத்தில் சிபார்சு செய்வோம்" என்று பேசாமலிருக்க, கோபம்கொண்டு பேசாமல் இருக்கிறாள் என்று நினைத்து "முப்பத்துமூவர்" எனும் இப்பாட்டின் முற்பாதியால் கண்ணனை எழுப்ப, அவனும் வாய் திறவாமையாலே பாட்டின் பிற்பாதியால் நப்பின்னையின் பெருமைகளைப் பேசி அவளிடம் தங்கள் விருப்பத்தை விண்ணப்பிக்கிறார்கள்.

"பன்னிரு ஆதித்தியர்கள், பதினொரு உருத்திரர்கள், எட்டு வசுக்கள், அசுவினி தேவர்கள் இருவர் என முப்பத்துமூன்று தேவர்களைத் தலைவர்களாகக்கொண்ட முப்பத்து முக்கோடி தேவர்களுக்குத் துன்பம் வரும் முன்பே சென்று அவர்களுடைய நடுக்கத்தைப் போக்கியருளும் பலமுடைய கண்ணபிரானே! பள்ளி எழுந்தருளாய். உன்னுடைய பலம் எங்களைப் போன்ற அபலைகளை ரக்ஷிக்கவன்றோ பயன்படவேண்டும். அடியார் விஷயத்தில் நேர்மையுடையவனே! எங்களிடம் சொன்னசொல் தவறாமல் நேர்மையுடன் இருக்கவேண்டாமா? பலமுடையவர்களின் பலமெல்லாம் உன்னால் வந்ததன்றோ. அந்த பலத்தை எங்களிடமா காட்டுவது? எங்களுக்கு

http://acharya.org

விரோதியாயிருப்பவர்களையன்றோ நீ பய நெருப்பாலே கொளுத்த வேண்டும். இதுவன்றோ உனக்குத் தூய்மை. நீ துயிலெழும் காட்சியைக் காட்டி எங்களைக் களிப்படையச் செய்வாய்'' என்று சொல்லி எழுப்பினார்கள்.

அப்போதும் கண்ணன் எழுந்திராமையாலே மறுபடியும் நப்பின்னையை எழுப்புகிறார்கள். ''செப்புபோல் இருக்கும் மார்பகங்களையும், சிவந்த வாயையும், நுண்ணிய இடையையும் உடைய நப்பின்னைப் பிராட்டியே! எங்களுக்குக் கண்ணனைக் கொடுத்து நிறைவடையச் செய்தாலன்றோ நீ நிறைவுடையவளாக முடியும். கிருஷ்ணாவதாரத்தில் ஸ்ரீதேவியின் இடத்திலிருந்து எங்களைக் கண்ணனோடு சேர்த்து வைப்பவள் நீயேயன்றோ. பெண்ணின் வருத்தம் அறியாத அவனைப் போலல்லாமல் பெண்ணாய்ப் பிறந்த நீ உணர்ந்தெழுந்து வந்து எங்களை உயிர் தரிக்கச் செய்வாயாக'' என்றார்கள்.

''உங்களுக்குச் செய்ய வேண்டுவது என்ன?'' என்றாள் நப்பின்னை. ''நோன்புக்கு வேண்டிய விசிறி, கண்ணாடி முதலான வற்றையெல்லாம் கொடுத்து இப்போதே கண்ணனையும் எங்களுக்குத் தந்து அவனை உன் அமுதமொழிகளால் நீராட்டி, எங்கள் மேல் அவனுக்குள்ள கோபதாபத்தைப் போக்கடித்து எங்களை உங்களிருவருடைய கருணைவெள்ளத்தாலே நீராட்டு'' என்கிறார்கள்.

''விதியின் மக்களும் மாசில் எண்மரும் பதினொரு கபிலரும் தாமா இருவரும்'' http://acharya.org ''மாயோய்! நின்வயின் பரந்தவை உரைத்தேம்'' ''அமரர்க்கு முதல்வன் நீ'' என்று சங்கத்தமிழர் கூறியதையே ''முப்பத்துமூவர் அமரர்க்கு முன் சென்று கப்பம் தவிர்க்கும் கலியே'' என்றும், ''திணிநிலம் கடந்தக் கால் திரிந்து அயர்ந்து அகன்று ஓடி நின் அஞ்சிக்

கடற்பாய்ந்த பிணிநெகிழ்பு அவிழ்பு தண் தார் அன்னவர்பட அல்லா அவுணர்க்கும் முதல்வன் நீ' என்று சங்கத்தமிழர் கூறியதை ''திறலுடையாய்! செற்றார்க்கு வெப்பம் கொடுக்கும் விமலா'' என்றும் சங்கத்தமிழ்மாலையில் ஆண்டாள் அனுஸந்தித்தாள்.

21. ஏற்றகலங்க ளெதிர்பொங்கி மீதளிப்ப
மாற்றாதே பால்சொரியும் வள்ளல்பெரும்பசுக்கள்
ஆற்றப்படைத்தான் மகனே! அறிவுறாய்
ஊற்றமுடையாய்! பெரியாய்! உலகினில்
தோற்றமாய் நின்ற சுடரே! துயிலெழாய்
மாற்றாருனக்கு வலிதொலைந்துன் வாசற்கண்
ஆற்றாது வந்துன்னடி பணியுமாபோலே
போற்றி யாம் வந்தோம் புகழ்ந்தேலோ ரெம்பாவாய்.

சென்ற பாட்டில் எழுப்பப்பட்ட நப்பின்னைப் பிராட்டியோடு கூடி கண்ணனை எழுப்புகிறார்கள். ''ஏற்ற கலங்கள்'' எனும் இப்பாட்டில்.

''இட்ட கலங்கள் எதிரே பொங்கி வழியும்படி இடைவிடாமல் பால் சொரிகின்றவையாய், அனைவர்க்கும் வசப்பட்டிருக்கும் வள்ளல்களான பெரிய பசுக்களை மிகவும் படைத்தவரின் குமரனே! எழுந்திருப்பாயாக'' என்றார்கள். 'இது திருவாய்ப் பாடியிலுள்ள அனைவருக்கும் உள்ளது' என்று பேசாதிருந்தான். இனி அவனுக்கே உள்ள பெருமை களைச் சொல்லி எழுப்புகிறார்கள். ''என்றுமுள்ள மறைகளால் பரம்பொருளாகச் சொல்லப்படும் உறுதியுடையவனே! அந்த மறைகளும் எல்லை காணாதபடி பெரியவனாயிருப்பவனே! இப்படிப் பெரியவனாயிருந்த போதிலும் இவ்வுலகில் அவதரித்து அனைவர்க்கும் தோற்றி நின்று பரஞ்சுடரானவனே! எங்களுக்கு நீ எழுந்திருந்து

http://acharya.org

அருள்புரியாவிடில் உனது சுடர் மழுங்கிவிடாதோ'' என்றார்கள்.

''எழுந்திருக்கிறோம். நீங்கள் வந்தபடியை ஒரு பாசுரமிட்டுச் சொல்லுங்கள்'' என்று கண்ணன் நியமிக்க, சொல்லுகிறார்கள். ''உனக்கு எதிரிகளாயிருப்பவர்கள் உன் வலிமையாலே தங்கள் பலம் அழிந்து வேறு புகலில்லாமல் உன் வாசலில் வந்து கிடப்பது போலே நாங்களும் வந்திருக்கிறோம். அவர்கள் உனக்குத் தோற்று உன் திருவடிகளைப் போற்றிப் பணிவதுபோலே நாங்களும் உனக்குப் பல்லாண்டு பாடிக்கொண்டும், எதிரிகளைப் போலே புகழ்ந்து கொண்டும் உன் அடிபணிந்து வந்தோம், எங்களை ரக்ஷிக்க வேண்டியது உன் பொறுப்பு'' என்கிறார்கள்.

சங்கத்தமிழர் முதற்பரிபாடலில் ''நின்வலவயின் நிறுத்தும் ஏவல் உழந்தமை கூறும் நாவல் அந்தணர் அருமறைப் பொருளே'' ''வாய் மொழிப்புலவ'' என்றும், இரண்டாம் பரிபாடலில் ''வடுஇல் கொள்கையின் உயர்ந்தோர் ஆய்ந்த கெடுஇல் கேள்வியுள் நடு ஆகுதலும்'' என்றும், ''நாவல் அந்தணர் அருமறைப் பொருளே' என்றும், மூன்றாம் பரிபாடலில் ''மாயோய்! நின்வயின்பரந்தவை உரைத்தேம் மாயா வாய்மொழி உரைதர வலந்து வாய்மொழி ஓடை மலர்ந்த தாமரைப் பூவினுள் பிறந்தோனும் தாதையும், நீ என மொழியுமால் அந்தணர் அருமறை'' ''நின்னைப் புரை நினைப்பின் நீ அலது உணர்தியோ முன்னை மரபின் முதுமொழி முதல்வ'' ''பதினாயிரம் கை முதுமொழி முதல்வ'' ''கால முதல்வனை, ஏஎஇனகிளத்தலின் இனமை நற்கு அறிந்தனம்'' ''வேதத்து மறைநீ'' ''தொல்லியல் புலவ'' என்றும், நாலாம் பரிபாடலில் ''அவை நின்ஓர்அன்ஓர்

http://acharya.org

அந்தணர் அருமறை'' என்றும், பதின்மூன்றாம் பரிபாடலில் ''பாப்புப்பகையைக் கொடி எனக் கொண்ட கோடாச் செல்வனை ஏவல் இன் முதுமொழி கூறும்'' என்றும், பதினைந்தாம் பரிபாடலில் ''நலம் புரீஇ அம் சீர் நாம வாய்மொழி இது என உரைத்தலின்'' என்றும் கூறியதையே ''ஊற்றமுடையாய் பெரியாய்'' என்றும், ''தெருள நின்வரவு அறிதல் மருள் அறுதேர்ச்சி முனைவர்க்கும் அரிதே அன்னமரபின் அனையோய்! நின்னை இன்னன் என்று உரைத்தல் எமக்கு எவன் எளிது'' என்றும், ''பிறவாப் பிறப்பிலை பிறப்பித்தோர் இலையே'' என்றும் பரிபாடல் களில் கூறியதை ''பெரியாய்! உலகினில் தோற்றமாய் நின்ற சுடரே'' என்றும் சங்கத்தமிழ்மாலையில் ஆண்டாள் முழங்கினாள்.

22. அங்கண்மாஞாலத் தரசர் அபிமான
பங்கமாய் வந்துநின் பள்ளிக்கட்டிற்கீழே
சங்கமிருப்பார்போல் வந்து தலைப்பெய்தோம்
கிங்கிணி வாய்ச்செய்த தாமரைப் பூப்போலே
செங்கண் சிறுச்சிறிதே யெம்மேல் விழியாவோ
திங்களு மாதித்தியனு மெழுந்தாற்போல்
அங்கணிரண்டுங்கொண் டெங்கள்மேல் நோக்குதியேல்
எங்கள் மேற் சாப மிழிந்தேலோ ரெம்பாவாய்.

''அங்கண் மா ஞாலம்'' என்று தொடங்கும் இப்பாட்டி லும் கண்ணனை எழுப்புகிறார்கள். அஹங்கார மற்றுத் தாங்கள் வந்ததைச் சென்ற பாட்டில் கூறினார்கள். http://acharya.org அவனுக்கே அடிமைப்பட்டு வந்ததை இப்பாட்டில் கூறுகிறார்கள்.

''அழகியதாய், பரப்பையுடையதான இம்மாநிலத்தில் உள்ள அரசர்கள் தங்களுடைய அஹங்காரம் குலைந்து வந்து

உனது படுக்கையின் கீழே கூட்டமாகக் கூடியிருப்பது போலே நாங்களும் உனக்கு அடிமைப்பட்டு வந்து கூடியிருக்கிறோம். கிங்கிணிவாய் போலே பாதி மலர்ந்திருக்கும் தாமரைப்பூவை ஒத்து உனது சிவந்த திருக்கண்கள் நாங்கள் பொறுக்கும்படியாகச் சிறிது சிறிதாக எங்களைக் கடைக்கணிக்கமாட்டாவோ?'' என்றார்கள். ''என் கண்கள் கடாக்ஷிப்பதால் உங்களுக்கு என்ன பயன்?'' என்று கேட்டான் கண்ணன்.

''சூரியனும் சந்திரனும் ஒரே சமயத்தில் எழுந்தது போலே எங்களது அஜ்ஞானமாகிற இருளை அகற்றி, எங்களுடைய விரஹதாபத்தைப் போக்கும் உன்னுடைய அழகிய கண்கள்கொண்டு எங்களைக் கடாக்ஷித்தாயானால் நாங்கள் உன்னைப் பிரிந்துபடும் துன்பமெல்லாம் நீங்கும்'' என்கிறார்கள். பரமாத்மா கடாக்ஷிக்கும் வரையிலேயே ஜீவர்களுக்குத் துன்பம் என்றும், அவன் கடைக் கணித்தவுடன் இவர்களுடைய அஞ்ஞானமும் அதனால் வரும் துன்பமும் நீங்கிவிடும் என்றும் உணர்த்துகிறார்கள்.

சங்கத்தமிழர் ''எரிமலர் சினைஇய கண்ணை'' என்று முதற்பரிபாடலிலும், ''கண்ணே புகழ்சால் தாமரை அலரிணைப் பிணையல்'' என்று இரண்டாம் பரிபாடலிலும், ''செங்கண்காரி'' என்று மூன்றாம் பரிபாடலிலும், ''செயிர்தீர் செங்கண் செல்வ'' ''நிரை இதழ்த் தாமரை அன்ன நாட்டத்து அளப்பரியவை'' என்று நாலாம்பரிபாடலிலும், ''அடைஇறந்து அவிழ்ந்த வள் இதழ்த்தாமரை அடியும், கையும், கண்ணும், வாயும்'', ''செறாஅச் செங்கண் செருமிகுதிகிரிச் செல்வ'' என்று பதின்மூன்றாம் பரிபாடலிலும், ''புவ்வத்தாமரை புரையும் கண்ணன்'' என்று பதினைந்தாம் பரிபாடலிலும் பாடியதையே

http://acharya.org

''தாமரைப்பூப்போலே செங்கண்'' என்றும், ''அங்கண் இரண்டும்'' என்றும் சங்கத்தமிழ் மாலையில் ஆண்டாள் பாடியது நோக்கத்தக்கது. ''தஸ்ய யதாகப்யாஸம் புண்டரீகம் ஏவமக்ஷிணீ'' (அவனுக்கு ஸூர்யனால் மலர்ந்த தாமரை போன்ற இரு கண்கள் உள) என்று சாந்தோக்ய உபநிஷத்தில் முழங்கப்பட்ட அர்த்தமே இது.

23. மாரி மலைமுழைஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும்
சீரியசிங்க மறிவுற்றுத் தீவிழித்து
வேரி மயிர்பொங்க வெப்பாடும் பேர்ந்துதறி
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்
போதருமாபோலே நீ பூவைப்பூவண்ணா! உன்
கோயில்நின் றிங்ஙனே போந்தருளி, கோப்புடைய
சீரிய சிங்காசனத்திருந்து யாம் வந்த
காரிய மாராய்ந் தருளேலோ ரெம்பாவாய்.

''மாரிமலைமுழைஞ்சில்'' என்று தொடங்கும் இப்பாட்டில் - சென்ற பாட்டில் கூறியபடி அபிமானம் அடங்கி அடிமைப்பட்டு வந்தோம் என்று இவர்கள் விண்ணப்பம் செய்தவுடன் ''ஐயோ! நப்பின்னைப் பிராட்டியைச் சேர்ந்தவர்களான இவர்களை இப்பாடுபடப் பார்த்திருந்தோமே'' என்று வருந்தி இவர்களுக்கு நல்வார்த்தை சொல்ல, இவர்களும் இவனுடைய நடையழகைக் காண நினைத்து ''இங்கு நின்றும் புறப்பட்டுச் சிங்கம்போலே நடை நடந்து சீரிய சிங்காசனத்திலிருந்து எங்கள் குறையை ஆராய்ந்தருள வேண்டும்'' என்கிறார்கள்.

http://acharya.org

''மழைக்காலத்தில் மலைக்குகையொன்றில் பொருந்திக் கிடந்து தூங்குகின்றதாய், வீர்யமாகிற சிறப்பையுடையதான சிங்கம் உணர்ந்தெழுந்து நெருப்புப் பொறி பறக்கும்படி கண்களை விழித்து மணம் வீசும் பிடரிமயிர்கள் பொங்கி

எழும்படி எல்லாப் பக்கங்களிலும் அசைந்து, தன் உடலை உதறி, உடல் ஒன்றாகும்படி நிமிர்ந்து கர்ஜனை செய்து வருவது போலே நீ வரவேண்டும்'' என்கிறார்கள்.

இதைக் கேட்ட கண்ணன் ''பெண்களே! சிங்கமோ நமக்கு த்ருஷ்டாந்தமாவது'' என்று முழங்க ''பூவைப் பூவண்ணா'' என்று அவனை அழைக்கிறார்கள். ''இயற்கையான கம்பீரத் தன்மைக்கும் வீர்யத்துக்கும் கர்ஜனைக்கும் சிங்கத்தை ஓர் உபமானமாகச் சொன்னோம். உன் வடிவழகும் நிறமும் மென்மையும் குளிர்ச்சியும் அதற்குண்டோ? இத்தன்மைகளில் உனக்கு ஓரளவுக்கு உபமானமாகப் பூவைப் பூவையே சொல்ல வேண்டியிருக்கிறது'' என்கிறார்கள். ''நீ படுக்கையில் கிடக்கும் அழகை அனுபவித்துவிட்டோம். இனி உன்னுடைய நடையழகையும், சிறப்புமிக்க சிங்காசனத்தில் வீற்றிருக்கும் அழகையும் காணவேண்டும். அதற்காகப் படுக்கையிலிருந்து நடந்து சிங்காசனமிருக்குமிடத்துக்கு வந்து நல்ல கட்டுக்கோப்பையுடைய அந்த சிங்காசனத்தில் வீற்றிருந்து நாங்கள் விரும்பி வந்த காரியத்தை விசாரித்தருள வேண்டும்'' என்கிறார்கள்.

''கஜஸிம்ஹகதீவீரௌ சார்த்தூல வ்ருஷபோபமௌ'', ''ஸிம்ஹவிக்ராந்தகாமிநௌ'' என்று வால்மீகி பகவான் ஸ்ரீராமாயணத்தில் பெருமானுடைய நடை ஒவ்வொரு சமயத்தில் யானை, சிங்கம், புலி, எருது ஆகியவற்றின் நடைபோலிருக்கும் என்றார். திருவரங்கம் நம்பெருமாளின் நடையில் இந்நாலு நடையழகையும் இன்றும் காணலாம்.

http://acharya.org

''பறவாப்பூவைப் பூவினோயே'' என்று மூன்றாம் பரிபாடலில் சங்கத்தமிழர் பாடியதையே சங்கத்தமிழ் மாலையில் ஆண்டாள் ''பூவைப் பூவண்ணா'' என்று பாடியது சுவைக்கத்தக்கது.

24. அன்றிவ் வுலகமளந்தாய்! அடிபோற்றி
சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய்! திறல்போற்றி
பொன்றச் சகடமுதைத்தாய்! புகழ்போற்றி
கன்று குணிலா வெறிந்தாய்! கழல்போற்றி
குன்று குடையா வெடுத்தாய்! குணம்போற்றி
வென்று பகை கெடுக்கும் நின்கையில் வேல்போற்றி
என்றென்றுன் சேவகமே யேத்திப் பறைகொள்வான்
இன்று யாம் வந்தோ மிரங்கேலோ ரெம்பாவாய்.

ஆயர் சிறுமிகள் விரும்பியபடியே சீரிய சிங்காசனத் தளவும் நடையிடத் தொடங்கினான். அதைக் கண்ட இவர்கள் ''அன்றிவ்வுலகம்'' என்னும் இப்பாட்டில் பெரியாழ்வாரைப் போலே தம்மை மறந்து அவனுக்கும் அவனது பெருமைகளுக்கும் பல்லாண்டு பாடுகிறார்கள்.

முதலில் அவன் நடையழகில் ஈடுபட்டு அவனுடைய திருவடிகளுக்கு மங்களாசாஸனம் செய்கிறார்கள். ''பிராட்டிமார் தொட்டாலும் சிவக்கும் திருவடிகளைக் கொண்டு காட்டையும் மேட்டையும் அளந்த திரிவிக் கிரமாவதார காலத்திலே இருந்து பல்லாண்டு பாடப் பெறாத குறைதீர இன்று அத்திருவடிகளுக்குப் பல்லாண்டு பாடு கிறோம். இராமாவதாரத்தில் பலநூறு காதங்கள் காடுகளை யெல்லாம் கடந்து எங்களைப் போன்ற ஒரு பெண்ணுக்காகத் தென்னிலங்கையை அழித்தவனே! உனது திறலுக்குப் பல்லாண்டு பாடுகிறோம்.

கிருஷ்ணாவ தாரத்தில் நீ கைக்குழந்தையாக இருந்த போது வண்டி உருவெடுத்து உன்னை அழிக்க வந்த சகடாசுரன் அழியும்படியாகக் காலால் உதைத்தவனே! உன்னுடைய இந்தப் புகழுக்குப் பல்லாண்டு பாடுகிறோம். இவ்வவதாரத்திலே கன்றாய் வந்த வத்ஸாசுரனை

எறிதடியாகக் கொண்டு விளாம் பழமாயிருந்த கபித்தாசுரனைக் குறித்து எறிந்து உனக்குத் தீங்கு நினைத்த அவ்விருவரும் ஒருசேர முடியும்படி செய்த உன்னுடைய மடக்கிய திருவடிகளுக்குப் பல்லாண்டு பாடுகிறோம். **அ**வ்வவதாரத்திலேயே அனுகூலனான தேவேந்திரன் பசிக்கோபத்தாலே ஆய்ப்பாடியின்மேல் கல்மழைபொழிய, கோவர்த்தன மலையைக் குடையாக எடுத்து ஆயர்களை ரக்ஷித்து, இந்திரனுக்கும் புத்தி புகட்டினவனே! உன்னுடைய குணத்துக்குப் பல்லாண்டு பாடுகிறோம். பகைவர்களை வென்று அழியச் செய்யும் உன் கையிலிருக்கும் வேலுக்குப் பல்லாண்டு பாடுகிறோம். இவ்வண்ணமாகப் பலமுறை பல்லாண்டு பாடிக்கொண்டு உனது வீரச் செயல்களைப் போற்றிப் புகழ்ந்து பறை கொள்வதற்காகவே நாங்கள் இன்று இங்கு வந்தோம். எமக்கு அருள்புரிய வேண்டும்'' என்கிறார்கள். ''ஜாக்₃ரு வாம்ஸ: ஸமிந்த₄தே'' என்று வேதத்தில் கூறிய மங்களாசாஸனம் இப்பாட்டில் விளக்கப்படுகிறது.

திரிவிக்கிரமாவதாரத்தையும் இராமாவதாரத்தையும் பாடிய சங்கத்தமிழர்கள் ''இடவல குடவல கோவல காவல'' முதலான பல இடங்களில் கிருஷ்ணாவதாரத்தையும் பாடினார்கள். மூன்று, பதினேழாம் பாடல்களில் திரிவிக்கிர மாவதாரத்தையும் பத்து பன்னிரண்டாம் பாடல்களில் இராமாவதாரத்தையும், பல பாடல்களில் கிருஷ்ணாவ தாரத்தையும் பாடிய ஆண்டாள் இங்கு மூன்று அவதாரங் களையும் சேர்த்துப் பாடியிருப்பது சிந்திக்கத்தக்கது. இரண்டாம் பரிபாடலில் ''நின் அடி தலையுற வணங்கினேம் பல் மாண்யாமும் கலிஇல் நெஞ்சினேம் ஏத்தினேம் வாழ்த்தினேம்'' என்று சங்கத்தமிழர் திருமாலின் அடிவணங்கிப் பலமுறை வாழ்த்தியதுபோலே ஆண்டாளும்

அவனது அடி முதலானவற்றைப் பலகால் போற்றியது சுவைக்கத்தக்கது.

25. ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவில்
ஒருத்தி மகனா யொளித்து வளரத்
தரிக்கிலானாகித் தான் தீங்கு நினைந்த
கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்
நெருப்பென்ன நின்ற நெடுமாலே! உன்னை
அருத்தித்து வந்தோம் பறை தருதியாகில்
திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம்பாடி
வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்.

''பல்லாண்டு பாடும் நீங்கள் என்னிடம் ஒரு பறையைக் கொள்ள வந்ததாகக் கூறுவது பொருந்தவில்லையே'' என்று கண்ணன் சொல்ல ''ஊராருக்காகவே நாங்கள் பறையை விரும்புவது. உண்மையில் உன்னிடம் உன்னையே வேண்டிவந்தவர்களே நாங்கள். நீயே தடைகளையும் நீக்கி நாங்கள் விரும்பியதை அருள வேண்டும்'' என்கிறார்கள் ''ஒருத்திமகனாய்'' எனத் தொடங்கும் இப்பாட்டில்.

''கண்ணா! நீ தேவகிப் பிராட்டியாகிய ஒருத்திக்கு நள்ளிரவில் பிள்ளையாய்த் தோன்றினாய். அதே இரவில் யசோதைப் பிராட்டியாகிய ஒருத்தியுடைய பிள்ளையாகி ஒளிந்திருந்து வளர்ந்தாய். தீய நினைவுடைய கம்சன் நீ ஒளிந்து வளருவதையும் பொறுக்கமாட்டாதவனாக ஆகி உன்னைக் கொல்ல நினைத்துப் பல தீச்செயல்களைச் செய்ய http://acharya.org முற்பட்டான். அவனுடைய எண்ணத்தை வீணாக்கி, அவன் வயிற்றில் எப்போதும் நெருப்புப் போலே பயத்தை விளைத்துக் கொண்டு நின்ற ஸர்வேச்வரனே! இப்படி அரிய செயல்கள் செய்ததால் அனைவர்க்கும் இறைவன் என்று

உன்னைக் காட்டிக் கொண்ட நீ எங்களிடத்தில் நெடிய அன்புடையவனாயிருக்கிறாய். உன்னிடத்தில் உன்னையே வேண்டி வந்தோம் நாங்கள். எங்களுக்காக நீ பிறக்கவும் வேண்டாம். ஒளியவும் வேண்டாம். உன்னைக் காட்டினால் போதுமானது'' என்றார்கள்.

''பறை கொள்ள வந்ததாகவும் என்னையே வேண்டி வந்ததாகவும் முரணாகப் பேசுகிறீர்களே'' என்றான் கண்ணன். ''நாங்கள் ஊராருக்காக நோன்புக்கு அங்கமான ஒரு பறையையும், எங்களுக்காக உனது கைங்கர்யமாகிற பறையையும் வேண்டுகையாலே, உனக்கு முரணாகத் தோன்றுகிறது. நாங்கள் விரும்பும் பறையாகிற கைங்கர்யத்தை நீயே தரவேண்டும். எங்களிடம் அதற்குரிய ஸாதனம் எதுவுமில்லை. இப்படி நீ பறையை அருளினா யானால் ஸ்ரீதேவியும் ஆசைப்படும் உன்னுடைய செல்வத்தையும் உனது வீரத்தையும் நாங்கள் பாடி, உன்னைப் பிரிந்து பலகாலமும் பட்ட துன்பமெல்லாம தீரப்பெற்று மகிழ்வோம்'' என்கிறார்கள்.

''எவ்வயின் உலகத்தும் தோன்றி அவ்வயின் மன்பது மறுக்கத் துன்பம் களைவோன்; அன்பது மேஎய் இருங்குன்றத்தான்'' என்று பதினைந்தாம் பரிபாடலில் சங்கத்தமிழர் பாடியதுபோலே ''ஒருத்தி மகனாய்ப் பிறந்து'' என்றும், ''கஞ்சன் வயிற்றில்நெருப்பென்ன நின்ற நெடுமாலே'' என்றும் சங்கத்தமிழ்மாலையில் ஆண்டாள் பாடினாள். பரமனான இவன் கர்மம் காரணமாகப் பிறப்பதில்லை என்றும், உலகினரை உய்விப்பதற்காகத் தன் விருப்பத்தாலேயே பிறக்கிறான் என்றும் ''பிறவாப் பிறப்பிலை பிறப்பித்தோர் இலையே'' என்று பரிபாடலில் சங்கத்தமிழர் அறிவித்ததையே ஆண்டாள் இப்பாடலில் உணர்த்துகிறாள்.

26. மாலே! மணிவண்ணா! மார்கழி நீராடுவான்
மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்
ஞாலத்தை யெல்லாம் நடுங்க முரல்வன
பாலன்ன வண்ணத்து உன்பாஞ்ச சன்னியமே
போல்வன சங்கங்கள் போய்ப்பாடு உடையனவே
சாலப் பெரும்பறையே பல்லாண் டிசைப்பாரே
கோல விளக்கே கொடியே விதானமே
ஆலினிலையா யருளேலோ ரெம்பாவாய்.

''மாலே மணிவண்ணா'' என்னும் இப்பாடலில் ''பெண்களே! நீங்கள் நோன்புக்கு அங்கமாக வேண்டிய பறையும், அதற்கு மற்றும் வேண்டியவையும் யாவை?'' என்று கண்ணன் கேட்க, ''மார்கழி நீராட்டமா கிற தங்களுடைய நோன்புக்கு வேண்டியவையான சங்கங்கள், பறைகள்,பல்லாண்டு பாடுவார், மங்கள தீபங்கள், கொடிகள், மேற்கட்டிகள் ஆகியவற்றைத் தந்தருள வேண்டும்'' என்று வேண்டிக் கொள்கிறார்கள்.

கண்ணனைக் கண்டவுடன் கடல்போலே கொந்தளிக்கும் அவனுடைய பேரன்பைப் பார்த்து ''மாலே -அன்பே வடிவெடுத்தவனே'' என்று அழைக்கிறார்கள். ''என்னு டைய பேரன்பை நீங்கள் எப்படி அறிந்தீர்கள்?'' என்று கண்ணன் கேட்க, ''மணிவண்ணா'' என்கிறார்கள். ''உன் அன்பு உன் வடிவிலே ஒளிவீசுகிறதன்றோ'' என்கிறார்கள். ''வந்த காரியத்தைச் சொல்லுங்கள்'' என்று கண்ணன் கேட்க, ஊரில் செழிப்பு ஏற்படுவதற்காகத் தாங்கள் ''மார்கழி நீராட்டம்'' என்னும் நோன்பைச் செய்வதைக் கூறுகிறார்கள். ''இந் நோன்புக்குப் பிரமாணம் என்ன? வேதங்களில் இதைச் செய்ய வேண்டும் என்று விதிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லையே'' என்று ஆக்ஷேபித்தான் கண்ணன்.

http://acharya.org

''வேதத்தைக் காட்டிலும் சிறந்ததான நல்லோர்களின் ஆசாரமே இதற்கு முக்கியமான ப்ரமாணம்'' என்று பதில் கூறுகிறார்கள். ''அந்த நோன்புக்கு வேண்டியவை யாவை'' என்று கேட்டான் கண்ணன். ''அவற்றைக் கேட்பாயாக'' என்று கூறிச் சொல்லுகிறார்கள். உலகமெல்லாம் அதிரும் படியான முழக்கத்தை உடையவையாய், பால் போன்ற நிறத்தை உடையவையாய், உன்னுடைய பாஞ்சஜன்யம் போன்றவையான சங்கங்கள் பல வேண்டும். நாங்கள் வருவதைத் தெரிவிக்கச் சங்கங்களோடு மிகப் பெரிய பறைகளும் வேண்டும். சங்கமும் பறையும் முழங்க நாங்கள் போகும்போது எதிரே நின்று ''இவர்களுக்கு எத்தீங்கும் வரலாகாது'' என்று பல்லாண்டு பாடுவாரும் வேண்டும். நாங்கள் ஒருவரை ஒருவர் கண்டு வாழ்வதற்கும், மங்களத்தைத் தருவதற்கும் அழகிய விளக்கும் வேண்டும். தூரத்திலிருப்பவர்களும் நாங்கள் வருவதை அறிந்து வாழும் படி முன்னே பிடித்துச் செல்ல, கொடியும் வேண்டும். பனி எங்கள் மேல்விழாமல் தடுக்க மேற்கட்டியும் வேண்டும்.

இவை ஒவ்வொன்றிலும் பல வேண்டும் என்று இறைஞ்சினார்கள். இவற்றில் தன்னிடமுள்ள ஒவ்வொன்றைக் கொடுத்து, ''பல இல்லையே'' என்றான். ''பெருவெள்ளத்திலே ஓர் சிறு ஆலந்தளிரிலே சிறு குழந்தையாயிருந்து உலகனைத்தையும் உண்ட உனக்கு முடியாததுண்டோ? பலவற்றை நீயே அருளவேண்டும்'' என்கிறார்கள்.

''ஆலமும் கடம்பும் நல்யாற்று நடுவும், கால் வழக்கு அறுநிலைக்குன்றமும், பிறவும் அவ்வவைமேய வேறு வேறு பெயரோய்'' என்று நான்காம் பரிபாடலில் திருமால் ஒவ்வொரு பெயரோடு எழுந்தருளியிருந்த இடங்களைக் குறிக்கும்போது ஆலினிலையை முதலிலே குறிப்பிட்ட

http://acharya.org

சங்கத்தமிழர்களைப்போலே, சங்கத்தமிழ்மாலையில் ஆண்டாளும் ''ஆலினிலையாய்'' என்று ஆலிலைக் கண்ணனைக் குறித்தாள். சங்கத்தமிழர் மாலாகவும் மணிவண்ணனாகவும் இவனைக் குறித்திருக்கும் இடங்கள் முன்னமே காட்டப்பட்டன.

27. கூடாரை வெல்லும் சீர்க் கோவிந்தா! உன்றன்னைப்
பாடிப் பறைகொண்டு யாம் பெறு சம்மானம்
நாடு புகழும் பரிசினால் நன்றாகச்
சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே
பாடகமே யென்றனைய பல்கலனும் யாமணிவோம்
ஆடை யுடுப்போ மதன்பின்னே பாற்சோறு
மூட நெய்பெய்து முழங்கை வழிவார
கூடியிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய்.

சென்ற பாட்டில் வேண்டிக் கொண்டபடி சங்கங்கள், பறைகள் முதலான பலவற்றைக் கொடுத்து ''இவ்வளவு தானே உங்களுக்கு வேண்டியது'' என்று கண்ணன் கேட்க, ''கூடாரை வெல்லும்'' என்னும் இப்பாட்டில் ''நோன்புக்கு முன்பு வேண்டியவை இவை: நோன்பு நோற்ற பின்பு எங்களுக்கு வேண்டிய பரிசுகளைக் கூறுகிறோம்'' என்று அவற்றைச் சொல்லுகிறார்கள்.

''எவ்வளவு முயன்றாலும் 'உன்னோடு கூட மாட்டோம்' என்று இருப்பவர்களையே நீ வெல்லுவது. 'உன்னோடு கூடுவோம்' என்று இருப்பவர்களிடம் தோற்பதே உன் இயல்பு. ஆகையால் உன்னிடம் உள்ளது அனைத்தையும் எங்களுக்குக் கொடுத்ததில் வியப்பில்லை. பசுக்களுக்கே உன்னைக் கொடுத்துக் கொண்டிருக்கும் கோவிந்தனன்றோ நீ'' என்கிறார்கள். ''உன்னை முன்பு பாடாமலிருந்த துன்பம் தீரும்படி வாயாரப் பாடினோம். ஊரார் விரும்பிய பறை

முதலான வற்றையும் உன்னிடமிருந்து பெற்றுக் கொண்டோம். இனி, நோன்பு நோற்ற பின்பு நாங்கள் உன்னிடம் பெறும் பரிசுகளைக் கூறுகிறோம் கேட்பாயாக'' என்கிறார்கள்.

''நீ கொடுக்கும் பரிசுகளைக் கண்டு ஊரெல்லாம் புகழும்படி கைக்கு ஆபரணங்களான சூடகங்களும், தோள்வளைகளும் காதணியாகிற தோடுகளும் செவியி லிடும் செவிப்பூவும், காலுக்கு அணியும் பாதகடகங்களும், இத்தகைய மற்றும் பல் ஆபரணங்களும் நீயும் நப்பின்னையும் சேர்ந்து எங்களுக்குப் பூட்டுகையாலே நாங்கள் நன்றாக அணிவோம். உங்களால் அணிவிக்கப்பட்ட ஆடைகளையும் உடுத்துக்கொள்வோம். நோன்பைத் தொடங்கு முன் ''மையிட்டெழுதோம் மலரிட்டு நாம் முடியோம்'' என்று சொன்ன குறை தீரப் பெறுவோம் என்கிறார்கள். ''நெய்யுண்ணோம் பாலுண் ணோம்'' என்று சொன்ன குறை தீர வேண்டாமோ?'' என்று கண்ணன் கேட்க, ''அக்குறையையும் நீ தீர்த்து வைக்க வேண்டும்'' என்கிறார்கள்.

''நீரிலேயல்லாமல் பாலிலேயே சோறாக்கி அச்சோறு மறையும்படி நெய்யையிட்டு உன்னோடு சேர்ந்து உண்போம். உன்னைப் பார்த்துக் கொண்டேயிருக்கையாலே உண்ண மறந்த எங்களுடைய முழங்கை வழியாக நெய்வழிந் தோடும். உன்னோடு கூடியிருப்பதே எங்களுக்குப் போதுமானது. இதனாலேயே பிரிவாலே காய்ந்துபோன எங்கள் நெஞ்சம் குளிரும்'' என்கிறார்கள்.

http://acharya.org

நாலாம் பரிபாடலில் ''படிமதம் சாய்த்தோய்'' என்று திருமாலை, பகைவர் மதம் கெடுப்பவனாக அழைத்து ''கடுநவை அணங்கும் கடுப்பும் நல்கலும் கொடுமையும்

செம்மையும் வெம்மையும் தண்மையும் உள்வழி உடையை இல்வழி இலையே'' என்று சங்கத்தமிழர் கூறியதையே சங்கத்தமிழ்மாலையில் ஆண்டாள் ''கூடாரை வெல்லும் சீர்க்கோவிந்தா'' என்று சுருக்கிக் கூறினாள்.

28. கறவைகள் பின்சென்று கானஞ்சேர்ந் துண்போம்
அறிவொன்று மில்லாத வாய்க்குலத்து உன்றன்னைப்
பிறவி பெறுந்தனைப் புண்ணியம் யாமுடையோம்
குறைவொன்று மில்லாத கோவிந்தா! உன்றன்னோடு
உறவேல் நமக்கிங் கொழிக்க வொழியாது
அறியாத பிள்ளைகளோம் அன்பினால் உன்றன்னைச்
சிறுபே ரழைத்தனவும் சீறியருளாதே
இறைவா ! நீதாராய் பறையேலோ ரெம்பாவாய்.

''கறவைகள்'' என்று தொடங்கும் இப்பாட்டில், ஆயர் சிறுமிகள் தங்களுக்கு வேண்டிய பறையைக் கேட்கப் போகிறார்கள் என்பதை அறிந்த கண்ணன், ''அதைப் பெறுவதற்குக் கர்ம ஜ்ஞான பக்தியோகங்கள் எனப்படும் சாதனங்கள் எதையாவது அனுஷ்டித்திருக்கிறீர்களா?'' என்று கேட்க, ''ஒரு சாதனத்தை அனுஷ்டிக்கக் கூடிய தகுதி எங்களுக்கு உண்டோ? உன்னாலே உன்னைப் பெற இருப்பவர்களன்றோ நாங்கள்'' என்கிறார்கள்.

''கர்ம ஜ்ஞான பக்தியோகங்கள் உண்டோ'' என்று கேட்ட கண்ணனைப் பார்த்து ''எங்களுடைய ஒழுக்கத்தைப் பார்த்தால் எங்களால் கர்மயோகத்தை அனுஷ்டிக்கவே இயலாது என்பதைத் தெரிந்து கொள்ளலாம்'' என்கிறார்கள். ''நாங்கள் வேதம் கரைகண்ட ஆசார்யர்களைப் பின் செல்வதில்லை. அறிவற்ற கறவைகளைப் பின்செல்வோம். பின்சென்று நாங்கள் அடைவது புண்ணிய க்ஷேத்திரங் களன்று. பசுக்களுக்குப் புல் மேய வசதியுள்ள காடுகளையே

அடைவோம். காய், இலை தின்று தவம் புரிவதற்காகக் காட்டையடைவதில்லை. காட்டை அடைந்து வயிறார உண்போம். இருந்து உண்பது முதலான நியமங்களும் இல்லை. பசுக்களின் பின்சென்று கொண்டே கிடைப்பதையெல்லாம் உண்போம்'' என்றார்கள்.

''கர்மயோகம் இல்லாவிடிலும் ஜ்ஞான யோகம் இருக்கலாமே'' என்று கண்ணன் கேட்டான். ''முதன்முதலில் எங்களுக்கு அறிவு இருந்தாலன்றோ ஜ்ஞானயோகம் ஏற்பட இடமுண்டு. இடக்கை, வலக்கை அறியாத எங்களுக்கு ஜ்ஞானம் ஏற்பட வழி உண்டோ'' என்றார்கள். ''அறிவில்லாதார்க்கும் அன்பு இருப்பதுண்டே, முன்பிறவிகளிலே ஜ்ஞானம் கனிந்து, இப்போது பக்தியோகத்தைப் பெற்றிருக்கிறீர்களோ'' என்று கண்ணன் கேட்க, ''அறிவொன்றும் இல்லாத எங்களுக்கு அறிவின் ஒரு வகையான பக்தியும் இல்லை'' என்றார்கள். ''கர்ம ஜ்ஞான பக்திகள் இப்போது இல்லாவிடினும் இனியாவது ஏற்படட்டும்'' என்றான். ''எங்களது குலம் ஆய்க்குலம் என்பதை அறியும் நீ எங்களிடம் அறிவை எதிர்பார்க்கலாமோ'' என்றார்கள்.

''உங்களிடம் ஒன்றுமில்லையாகில் உங்களைக் கைவிட வேண்டியதுதான்'' என்று கண்ணன் சொல்ல ''யாவர்க்கும் புண்ணியமான உன்னையே எங்கள் குலத்தில் பெற்றிருக்கும் போது எங்களை நீ கைவிட முடியாது. குறைவொன்றுமில்லாத கோவிந்தனான நீ அறிவொன்றுமில்லாத எங்கள் குறையையெல்லாம் நிரப்பி ஆட்கொள்ள வேண்டும். உனக்கும், எங்களுக்கும் உள்ள உறவு நம் இருவராலும் ஒழிக்க முடியாததாயிற்றே; அறியாத பிள்ளைகளான நாங்கள் அன்பினாலே முதலில் உன்னை நாராயணன் என்று சிறுபேரிட்டு அழைத்ததையும் நீ பொறுத்தருள வேண்டும்.

http://acharya.org

இறைவனாகிய நீயே எங்களிடம் எந்தக் கைம்முதலையும் எதிர்பாராமல் பறையைத் தந்தருள வேண்டும்'' என்கிறார்கள்.

''புரிமலர்த் துழாஅய்மேவல் மார்பினோய்! அன்னை என நினைஇ நின்னடி, தொழுதனெம்; முன்னும் முன்னும் யாம் செய்தவப்பயத்தால்'' என்று பதின் மூன்றாம் பரிபாடலில் பாடிய சங்கத்தமிழர் போலே சங்கத்தமிழ்மாலையில் ஆண்டாளும் ''உன்தன்னைப் பிறவி பெறுந்தனைப் புண்ணியம் யாமுடையோம், உன் தன்னோடுறவேல் நமக்கு இங்கொழிக்க ஒழியாது இறைவா'' என்று பாடினாள்.

29. சிற்றம் சிறுகாலே வந்துன்னைச் சேவித்து உன்
பொற்றாமரையடியே போற்றும் பொருள் கேளாய்
பெற்றம் மேய்த்துண்ணும் குலத்திற் பிறந்து நீ
குற்றேவ லெங்களைக் கொள்ளாமற் போகாது
இற்றைப் பறைகொள்வா னன்று காண் கோவிந்தா!
எற்றைக்கு மேழேழ் பிறவிக்கும் உன்றன்னோடு
உற்றோமே யாவோம் உனக்கே நாமாட் செய்வோம்
மற்றை நங் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்.

சென்ற பல பாட்டுக்களில் தாங்கள் விரும்பும் பறை என்று சொன்னது யாது? என்பதை 'சிற்றம் சிறுகாலே' என்னும் இப்பாட்டில் வெளிப்படுத்துகிறார்கள்.

''சிறுபெண்கள் எழுந்திருக்க மாட்டாத விடியற் காலையிலேயே உன்னைப் பெற வேண்டும் என்னும் பேரார்வத்தாலே எழுந்திருந்து நீ இருக்குமிடம் வந்தோம். அத்துடன் நில்லாமல் உன்னை வணங்கினோம். பொன்போலே உயர்ந்ததாய், அழகியதாய், தாமரை போலே மென்மைமிக்கதாய், நறுமணம் வீசுவதாய், தேன்

http://acharya.org

பெருகுவதான உன் திருவடிகளின் கீழேயிருந்து, விரும்பி நாம் சொல்லும் பொருளைக் கேட்பாயாக. பரமபதத்தில் இருந்த நீ மாடுகள் மேய்த்து உயிர் வாழும் குலத்தில் பிறந்ததின் காரணமென்ன? எங்களை ஆட்கொள்ள வன்றோ பிறந்தாய். அப்படியிருக்க, எங்களிடம் கைங்கர்யம் கொள்ளாமல் இருக்கலாமோ நீ? கைங்கர்யம் செய்யாம லிருக்க எங்களாலும் ஆகாது. கைங்கர்யம் கொள்ளாமல் இருக்க உன்னாலும் ஆகாது'' என்றார்கள்.

''கைங்கர்யத்தை நான் விரும்பியபோது கொள்கிறேன். நீங்கள் நோன்புக்கு அங்கமாக என்னிடமிருந்து பறையைப் பெற்றுக்கொண்டு செல்லுங்கள்'' என்றான் கண்ணன். ''ஒரு பயனைப் பெற்று அகல வந்தவர்களோ நாங்கள்? கோவிந்தனாய், பசுக்களோடு பழகினதால் நாங்கள் 'பறை' என்று சொன்னதின் பொருளை அறியமாட்டாதவன் ஆனாய் போலும்'' என்றார்கள். ''உங்களுக்கான பறை யாது என்பதை விவரித்துச் சொல்லுங்கள். இன்று அதைத் தருகிறேன்'' என்றான் கண்ணன்.

''இற்றைப் பொழுதுடன் அது போகாது. இப்பிறவியுடன் அது கழிவதில்லை. இப்பிறவிபோலே நீ எவ்வளவு பிறவி எடுத்தாலும் உன்னைத் தொடர்ந்து நாங்கள் அடிமை செய்ய வல்லவோ ஆசைப்படுகிறது. நீ பிறக்கும் இடமெல்லாம் உனக்கு உறவினராகவே நாங்கள் பிறக்க வேண்டும். உனக்கே ஆட்செய்ய வேண்டும். எங்களுடைய ஆனந்தத்துக்காகவும், உனக்கும் எங்களுக்கும் இன்பம் அளிப்பது என்னும் காரணத்தாலும் நாங்கள் கைங்கர்யம் செய்யமாட்டோம். உன் முகமலர்த்திக்காகவே கைங்கர்யம் செய்வோம். எங்களுடைய மற்ற விருப்பங்களையெல்லாம் மாற்றியருள வேண்டும்'' என்று அடைய வேண்டியதான ப்ராப்யத்தை அறுதியிட்டுச் சொல்லுகிறார்கள்.

முதற்பாட்டில் ''நாராயணனே நமக்கே பறை தருவான்'' என்று சுருக்கிச் சொன்ன ப்ராபகத்தையும் ப்ராப்யத்தையும் சென்ற பாட்டிலும் இப்பாட்டிலும் விரித்துச் சொல்லுகிறார்கள். ''அவனைக் கொண்டு அவனது கைங்கர்யத்தை அவன் உகப்புக்காகப் பெறுவதே ஜீவர்களின் வாழ்க்கைப் பயன்'' என்பது இத் திருப்பாவையின் ஸாரம்.

''காமரு சுற்றமொடு ஒருங்கு நின் அடியுறை யாம் இயைந்து ஒன்றுபு வைகலும் பொலிக என ஏமுறு நெஞ்சத்தேம் பரவுதும் வாய்மொழிப் புலவ! நின் தாள்நிழல் தொழுதே'' என்று முதற் பரிபாடலிலும், ''இன்னும் இன்னும் எம்காமம் இதுவே'' என்று பதின்மூன்றாம் பரிபாடலிலும் சங்கத்தமிழர் ஜீவன் பெறவேண்டிய பேற்றைத் தெரிவித்திருப்பதுபோலே சங்கத்தமிழ் மாலையில் ஆண்டாளும் இப்பாட்டில் ஒவ்வொரு சொல்லாலும் தெரிவித்திருப்பது உற்று நோக்கத்தக்கது.

30. வங்கக் கடல் கடைந்த மாதவனைக் கேசவனை
திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி
அங்கப் பறை கொண்டவாற்றை யணிபுதுவைப்
பைங்கமலத் தண்டெரியற் பட்டர்பிரான் கோதை சொன்ன
சங்கத் தமிழ் மாலை முப்பதுந் தப்பாமே
இங்கிப் பரிசுரைப்பார் ஈரிரண்டு மால்வரைத்தோள்
செங்கண் திருமுகத்துச் செல்வத்திருமாலால்
எங்கும் திருவருள் பெற்று றின்புறுவ ரெம்பாவாய்.

http://acharya.org

''பாக்யவதிகளான நீங்கள் என்னிடம் பெற்ற பயனைப் பிற்காலத்தில் உள்ளவர்கள் பெறுவதற்கு வழியுண்டோ'' என்று கேட்டான் கண்ணன். ''எக்காலத்தில் உள்ளவர்களும் இந்நூலைக் கற்றுணர்ந்தார்களாகில் அவர்கள் பெருமாளும்

பிராட்டியுமான திவ்ய தம்பதிகளாலே கடாக்ஷிக்கப் பெற்று இந்நோன்பை அனுஷ்டித்த ஆயர் சிறுமியரைப் போலவும் அவர்களது அடிச்சுவட்டைப் பின்பற்றிய ஸ்ரீவில்லிபுத்தூர்ப் பெண்களைப் போலவும் பேரானந்தம் அடைவர்'' என்று கூறி சங்கத்தமிழ் மாலையை நிறைவுபடுத்துகிறாள் ஆண்டாள் ''வங்கக் கடல்'' என்னும் இப்பாட்டில்.

திருப்பாற்கடல்நாதன் ஸ்ரீதேவியைப் பெறுவதற்குக் கப்பல்கள் உலவும் கடலைக் கடைந்தான். கடைந்து லக்ஷ்மீநாதன் ஆனான். அந்நிகழ்ச்சியையும், கடையும் போது அலையும் அவனது கேசபாசங்களின் அழகையும் கூடக்கடைந்த தேவாசுரர்கள் எல்லாரும் கண்டார்கள். இன்று நோன்பு என்னும் வியாஜத்தாலே மாதவனும் கேசவனுமான கண்ணன் ஆயர் சிறுமியரைப் பெற்றது அதை ஒத்திருக்கிறது. சந்திரன் போன்ற திருமுகத்தையும், கண்ணன் அணிவித்த ஆபரணங்களையும் உடைய அந்த ஆயர் சிறுமியர் கண்ணன் இருக்குமிடம் சென்று தூமலர் தூவித்தொழுது வாயினால் பாடி மனத்தினால் சிந்தித்து அடிபோற்றி, திறல்போற்றி, புகழ்போற்றி, கழல்போற்றி, குணம்போற்றி, வேல்போற்றி அவனிடம் பெரும் பயனான கைங்கர்யத்தைப் பெற்ற செய்தியை, கோதை இந்நூலாலே வெளிப்படுத்தினாள்.

உலகுக்கே ஓர் ஆபரணம் போலேயிருக்கும் ஸ்ரீவில்லிபுத்தூரில் அவதரித்த குளிர்ந்த தாமரை மலர் மாலையை அணிந்த பட்டர்பிரானாகிய பெரியாழ் வாருடைய திருமகள் அவள். சங்ககாலத் தமிழர்கண்ட பரமவைதிகமதத்தின் கருத்துக்கள் அனைத்தையும் பொதிந்து கொண்டதாக முப்பது பாட்டுக்கள் கொண்ட இந்நூலை இயற்றினாள் அவள்.

http://acharya.org

அதில் ஒரு பாட்டையும் விடாமல் இவ்வுலகில் ஓதுகின்றவர்கள் - அறம், பொருள், இன்பம், வீடு எனும் உறுதிப் பயன் நான்கையும் அளிப்பதற்காக மலைபோன்ற நான்கு திருத்தோள்களை உடையவனும், சிவந்த கண்களையும், அழகிய திருமுகத்தையும் உடையவனுமான உபயவிபூதி நாதனான திருமாலால் இம்மையிலும், மறுமையிலும் எங்கும் பேரருள் பெற்றுப் பரமானந்தம் அடைவர் என்று இத்திருப்பாவைக்குப் பலம் சொல்லி நிறைவுபடுத்துகிறாள் ஆண்டாள்.

''திகழொளி முந்நீர்கடைந்தக்கால்.... மிகா, இருவடம் ஆழியான் வாங்க'' என்று சங்கத்தமிழர் மத்தான மந்தரமலைக்கு இருபுறமும் நின்று திருமால் கடல் கடைந்த செய்தியை அநுஸந்தித்ததுபோலே ''வங்கக் கடல் கடைந்த மாதவனை'' என்று ஆண்டாளும் அநுஸந்தித்து ''சங்கத்தமிழ்மாலை'' என்று இத்திருப் பாவைக்குத் தானே திருநாமம் இட்டு நிறைவு படுத்துகிறாள்.

ஆண்டாள் திருவடிகளே சரணம்.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

★ ★ ★

http://acharya.org